12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

" NAM NADU " Official Organ of the D. M. K.

மலர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 2009 27—8—1978 | இதழ் 50

புனித ராஜ்யம்

கலைஞர் கருணாநிதி

(சூப்பிரண்டெண்ட் சுந்தரம் வசிக்கும் வீடு— வேலைக்காரன் வேலன் என்பான் சுந்தரத்தின் போலீஸ் உடைகளுக்கு "இஸ்திரி" போட்டுக்கொண்டிருக்கிறான். அப்போது வாசலில் ஜீப் வந்து நிற்கும் சப்தம் கேட்கிறது)

வேலன். ஆ! எஜமான் வந்துட்டாரு!

[ஆவலுடன் வாயிற்புறத்தை நோக்குகிறான்; சுந்தரமும் சொக்கியும் வருகிறார்கள். வேலனுக்கு வியப்பு)

சுந்தரம்; — என்னப்பா! வேலா! என்ன செய்து கொண்டிருக்கிறாய்?

வேலன்; — ஐயா உடைகளைத் தயார் பண்ணிகிட்டு இருக்கேங்க!

சுந்தரம். — இனி இந்த உடைகள் எதுவும்தேவையில்லை! நான் இந்த வேலையிலிருந்து என்னை விடுவித்துக் கொண்டு விட்டேன். இனிமேல் நீ கூட இங்கிருந்து போய்விடலாம். இன்று ஒரு நாள்! நான் நாளைய தினம் இந்த வீட்டையும் காலி செய்து விடுகிறேன்.

வேலன் என்னங்க திடீர்னு என்னமோ சொல்றீங்க? யாரோ ஒரு அம்மா வந்து இருக்காங்க; அவுங்களைக்கூட யாருன்னு சொல்லலே! எனக்கு வேலையில்லேன்னு உத்திரவு நாளைக்கு வீடு காலின்னு தகவலு! ஒண்ணுமே புரியலியே!...

சுந்தரம்: இந்த அம்மாவை யாருன்னு நீ தெரிஞ்சிக்க வேண்டிய அவசியமில்லே! நான் என் வேலையை ராஜினாமா செய்துவிட்டேன் - நாளைக்கே, என்னிடமுள்ள போலீஸ் இலாகா சம்பந்தப்பட்ட சகல பொருள்களையும் மேலதிகாரியிடம் ஒப்படைத்து விட்டு நான் சாதாரண மனிதனாக ஆகிவிடப் போகிறேன், இந்த முடிவுக்கான காரணத்தையும் நீ தெரிஞ்சிக்கத் தேவையில்லை'

(வேலன், அழுகிறான்)

சுந்தரம்: வேலா ஏன் அழுகிறாய்?

வேலன்: இந்த இலாக்காவிலே இதயமுள்ள மனுஷர்களிலே நீங்க ஒருத்தரா இருந்தீங்க! உங்க மனசு வெறுத்து வேலையை விட்டு விலக வேண்டிய அளவுக்கு அப்படி என்னங்க வந்துடுச்சு?

சொக்கி: [குறுக்கிட்டு] அதைத்தான் நான் கூட சொன்னேன் ஐயா கிட்டே! கேவலம் எனக்காக, ஒரு உயர்ந்த பதவியை, மேலும் மேலும் புகழ் தேடித்தரப்போற பதவியைத் தூக்கி எறிய வேண்டாம்னு!

சுந்தரம்: உனக்காக அல்ல! உன்னைப்போன்ற பலருக்கு நியாயம் கிடைக்கச் செய்யும் சக்தியற்றுப் போன காரணத்தால் தான் நான் இந்த முடிவுக்கு வந்தேன்.

சொக்கி: உங்களைப் போன்றவர்கள் அந்த இடங்களில் இருந்தால்தானே நியாயத்திற்காகப் போராடவாவது முடியும்

வேலன்: ஆமாங்க ஐயா சின்னப் பெண்ணு இருந்தாலும் நீங்க சிந்திக்கவேண்டிய ஒரு விஷயத்தைச் சொல்றுங்க! அதுமாத்திரம் இல்லே! நீங்க இப்ப வேலையை ராஜினுமா செஞ்சா, ஊர்ல என்ன சொல்லுவாங்க? இந்தப் பெண்ணு வந்து வீட்ல

காட்சி-7

காலடி வச்சுது; உடனே ஆம்படையான்வேலைக்கு ஆபத்து வந்ததுன்னு பேசுவாங்களே...

சுந்தரம்: டேட! டேட! வாயை மூடு'...

வேலன்: 144 ங் களா?

சுந்தரம், நீ நினைக்கிறது

[தொடர்ச்சி 11 ம் பக்கம்]



இதோ ஒரு 'மாதிரி' மனிதர்

க. சுப்பு
எம்.எல்.ஏ.

இன்றைய தமிழக அரசு மற்ற மாநிலங்களுக்கெல்லாம் ஒரு 'மாதிரி' அரசாக விளங்குகிறது; அதாவது ஓர் எடுத்துக்காட்டாகவே விளங்குகிறது

இந்த அரசு செயல்படும் விதத்தைப் பலரும் கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கிறார்கள் அதிலும் முதலமைச்சருடைய அன்றாட அலுவல்களையும் அரசியல் விளக்கங்களையும் அறிந்து உலகுக்கு வழங்குவதில் பலருக்கும் ஆர்வம் பிறந்திருக்கிறது. அந்த அடிப்படையில்தான் பி பி. சி. நிறுவனத்தாரும் ஒரு படச் சுருளைத் தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள்

முதலமைச்சர் கோட்டையில் அமர்ந்து பொதுமக்களிடமிருந்து வரும் முறையீடுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்; அதற்கென ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குவது அவசியம் என்பதைப் பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறோம்; பலன் எதுவும் ஏற்படாததால் ஆளுநரிடமே முறையிட்டிருக்கிறோம்; சட்டமன்றத்திலும் வலியுறுத்தியிருக்கிறோம். இருப்பினும் கோரிக்கை ஏற்கப்படவில்லை.

நல்லவேளையாக பி பி. சி. நிறுவனத்தார் முதலமைச்சர் பொதுமக்களிடம் மனு வாங்கும் நிகழ்ச்சியைப் படமாக்க வேண்டும் என்று கூறிய காரணத்தால் அதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றன; நேரமும் ஒதுக்கப்பட்டது; ஒத்திகை முடிந்து கோட்டையிலேயே படமும் எடுக்கப்பட்டுவிட்டது. நாம் விரும்புவதெல்லாம் அந்த நிகழ்ச்சி ஒரு நாள் கூத்தாக முடிந்துவிடாமல் முதலமைச்சரின் அன்றாட அலுவல்களில் ஒன்றாகத் தொடரவேண்டும் என்பதுதான். அதன் மூலம் மற்றவர்களுக்கு ஒரு 'மாதிரி' யாக விளங்காவிட்டாலும் 'மரபுகளைக் காப்பாற்றும் மனிதர் என்ற எண்ணத்தையாவது உருவாக்கலாமே?

மதுவிலக்குக் கொள்கையை நிறைவேற்றுவதில் தமிழகம் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குவதாக ஓர் ஆண்டுச் சாதனைப் பட்டியலில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது!

இது தமிழக அரசின் நேர்மைக்கும் நியாயத்திற்கும் ஓர் அருமையான எடுத்துக்காட்டு! தமிழகத்தில் மதுபானம் எங்கும் இல்லை; அறவே ஒழிந்துவிட்டது. அதனை ஆதாரமாகக் கொண்டுதான் மத்திய அரசாங்கத்திடமிருந்து "முழு நஷ்டஈடும் கேட்டு வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். 'யானைக்குக் கோவணம் கட்ட முயலும் இந்த அறிவாளிகளைப் பற்றிப் படம் பிடித்துக் காட்டாமல் வேறு என்ன செய்வது?

எல்லா அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யுமாறு மத்திய அரசு தாக்கீது அனுப்பிப் பல மாதங்கள் ஆகின்றன. நக்சலைட் கைதிகளை விடுதலை செய்யுமாறு சட்டமன்றத்தில் எல்லா அரசியல் கட்சிகளும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்து வலியுறுத்தின, அப்போது விரைவில் விடுதலை செய்வதாக வாக்குறுதியும் அளிக்கப்பட்டது

ஆனால் நடந்தது என்ன? அறுபது வயதைத் தாண்டிய அனந்தநாயகி அம்மையார் கூட இன்னும் விடுதலை செய்யப்படவில்லை தற்போது எல்லாவற்றையும் மிஞ்சக் கூடிய முறையில் முப்பதே வயது நிரம்பிய கிருஷ்ணன் செட்டி என்ற வீர இளைஞன் "நக்சலைட்" என்ற பெயரால் கோவை மத்திய சிறையில் தூக்கிலிடப் பட்டிருக்கிறான். இந்தச் செய்தி இருட்டடிப்புச் செய்யப்பட்டு விட்டது. வடநாட்டில் செய்தி அறிந்த பலரும் கண்டன ஊர்வலங்களை நடத்தியிருக்கிறார்கள்

இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்திற்குப் பின்னர் ஓர் அரசியல்வாதி முதன் முறையாக இப்போதுதான் தூக்குக்கயிற்றை முத்தமிட்டிருக்கிறான்; அதுவும் தமிழகத்தில் தான் நடைபெற்றிருக்கிறது அரசியல்வாதி அல்லாத ஒருவர் ஆளுகின்ற மாநிலத்தில் இலட்சிய அரசியல்வாதி ஒருவன் தூக்கிலிடப்படுவது ஒரு செய்தி தான்; அதிசயம் அன்று இந்த வகையிலும் நம்முடைய முதல்வர் மற்றவர்களுக்கெல்லாம் ஒரு 'மாதிரி'யாகவே விளங்குகிறார்!

காவல் நிலையங்களுக்கு விசாரணை என்ற பெயரால் அழைத்துச் செல்லப்படும் கைதிகள் கொல்லப்படுவதும் அதற்கு அவரவர் மனம் போன போக்கில் "தகுந்த காரணங்கள்" சொல்லப்படுவதும் அன்றாட நிகழ்ச்சிகள். அந்த அப்பாவி மனிதர்களிடம் உண்மையை வரவழைப்பதற்காக கட்டிய மனைவியரைக் கண்ணெதிரே கற்பழிக்கும் காவல்துறை அதிகாரிகளின் கண்ணியம்மிக்க நடவடிக்கைகளில் ஒன்றாக மாறிவிட்டது இந்தக் கொடுமைகளைக் கண்டித்து பொதுமக்கள் தொடுத்த எழுந்தால் தடியடி; கண்ணீர்ப்புகை; துப்பாக்கிச் சூடு எதற்கும் ஒரு நீதிவிசாரணை கிடையாது; எல்லாவற்றுக்குமே வீதி விசாரணைதான்

பழநி, கோவை சம்பவங்கள் போன்றவை ரத்தக்கறை படிந்த அத்தியாயங்கள் இருப்பினும் எம். ஜி. ஆரின் நிர்வாகத் திறமைக்கு இவையெல்லாம் அசைக்க முடியாத ஆதாரங்கள்!

தொழில் தகராறுகளைத் தீர்த்து வைக்கும் பொறுப்பினையும் போலீசாரிடமே ஒப்படைத்திருக்கிறார்கள். டால்மியாபுரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் இந்த அரசு ஒரு 'மாதிரி' அரசு என்பதை அனைவருக்கும் எடுத்துக் காட்டுகின்றன

"அம்பத்தூரிலுள்ள டி ஐ சைக்கிள் தொழிலாளர் பிரச்சினையை முதலமைச்சரே நேரடியாகத் தீர்க்கப் போகிறார்" என்று கூறப்பட்டது.

எனினும் அவருக்குள்ள நேரக் குறைவினால் சிறிது தாமதம் ஆகிறதாம்! தொழிலாளர்களில் 400 பேரை வீட்டுக்கு அனுப்பவும் சம்பளத்தில் ரூ 150/ஐக் குறைத்துக் கொள்ளவும் 27 பேரை நடவடிக்கை மூலம் வெளியேற்றவும் தொழிற்சங்கம் ஒப்புக் கொள்ள வேண்டுமாம். இந்தப் புரட்சிகரமான திட்டத்தை முன்வைக்கும் தைரியம் இதற்கு முன்னர் யாருக்காவது வந்தது உண்டா? இதிலும் எம். ஜி. ஆர். ஒரு 'மாதிரி' மனிதர்தான்!

"வேலை நிறுத்தத் தடை" அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தாரே அது மட்டும் சாதாரணமானதா? இந்தியாவில் வேறு யாரும் பிறப்பிக்க முன் வராத சட்டம் அல்லவா? அதிலும் நம் முதலமைச்சர் ஒரு 'மாதிரி தான்

நீதி விசாரணை போடமாட்டார். அப்படியே போட்டாலும் அதில் நீதிபதிக்கு வேலையே வைக்கமாட்டார்; முன்கூட்டியே முடிவினையும் மூடிமறைக்காமல் சொல்லிவிடுவார். அதன் பின்னர், தன் சொற்கேட்டு முடிவு கூறும் அந்தக் கைய மனிதருக்குத் தகுந்த வெகுமதியும் அளிப்பார்; கொடைவள்ளல் என்ற பட்டத்தை அவ்வளவு சீக்கிரத்தில் விட்டுவிட முடியுமா?

என்ன இருந்தாலும் நம் முதலமைச்சர் ஒரு மாதிரியானவர்தான்! அவரைப் பல கோணங்களில் படம் பிடித்துப் பார்த்து ரசிப்பது ஒரு புதுவகைப் பொழுது போக்குத்தான்!

சட்டம் ஒழுங்கு - சந்தி சிரிக்கிறது!

சா. கணேசன்

சினிமாக் கவர்ச்சியை மூலதனமாக வைத்து ஆட்சிபீடமேறிய நடிக முதல்வர் சாராயம் காய்ச்சுகிறவர்களை கடுமையாகத் தண்டிப்பேன் என்று மூச்சுக்கு முன்னூறு முறை முழக்கமிடுகிறார். ஆட்சியின் தலைவர் ஆணையிடுகிறார் என்று எண்ணி காவல் துறையினர் ஜீப்பிலே பறக்கின்றனர். காய்ச்சி விற்கின்ற தேனும் பேட்டை இடம் நோக்கிகையும் களவுமாக சாராயக் காரர்களை காவல் துறையினர் மடக்கிப் பிடிக்கின்றனர். தவறு செய்கின்றவர்கள் தண்டனையில்லை சாராயக் காரர்கள் காவல் துறையினர் மீது பாய்கிறார்கள். கம்பத்திலே கட்டிப்போட்டு நையப் புடைகிறார்கள். ஒரு காவல் துறை அதிகாரியின் மண்டையைப் பிளக்கிறார்கள் பட்டப் பகலில் இந்தச் சம்பவம் பகிரங்கமாகவே நடைபெறுகிறது ஆளுங்கட்சிக்காரர் சட்டத்தையே தங்கள் கையிலே எடுத்துப் பையிலேபோட்டுக் கொள்கின்றனர்.

'சட்டம் தன் வேலையைச் செய்ய' முடியவில்லை அடங்கிக் கொள்கிறது. முடங்கிக் கொள்கிறது. நாட்டில் ஒழுங்கும் ஓய்வு கொண்டு விடுகிறது

விழுப்புரத்தில் சமீபத்தில் ஏற்பட்ட கலவரம் தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெற்றது. வீடுகளுக்குத் தீ வைக்கப்பட்டது குடிசைகளெல்லாம் தீக்கிரையாகித் தரை மட்டமாகி விட்டன. கடைகளெல்லாம் சூறையாடப்பட்டன. இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் நாசமாக்கப் பட்டன. எல்லாவற்றுக்கும் மேலாக பன்னிரண்டு பேர் அடித்தே கொல்லப்பட்டனர்.

காவல்துறை ஒன்று செயல்படுகிறதா என்ற சந்தேகமே நாட்டு மக்களுக்கு வந்து விட்டது. நாட்டை ஆளும் நாயகர்கள் தேர்தல் வெற்றி போதையில் பாராட்டுக் கூட்டத்தில் பங்கு பெறுகிறார்கள். விழுப்புரத்தில் பிணங்கள் விழுகின்றன விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டிய அரசாங்கம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. சட்டம் அங்கே சந்தி சிரிக்கிறது ஒழுங்கு அங்கே ஓரத்தில் ஒதுங்கி விட்டது.

ஒன்றல்ல; இரண்டல்ல, ஓராயிரம் நிகழ்ச்சிகள் நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சட்டம் பல வேளைகளில் ஒடிந்து விழுந்து விடுகிறது-புயற்காற்றில் பெருமரங்கள் வீழ்வதைப் போல.

இன்றைய ஆட்சியாளரின் திறமைமிகு நிர்வாகத்தில் தாய்மார்கள் பட்டப் பகலில் காவல் நிலையத்தில் கற்பழிக்கப்படுகிறார்கள்;

இது நாடா அல்லது காடா என்று சொல்லத்தக்க வகையில் நடிகர், ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்.

இந்த ஆட்சியில் ஓர் அதிசயம் நடந்திருக்கிறது. ஆனால் உண்மையுங்கூட.

நெல்லை மாவட்டம் கோவில்பட்டியில் இத்திங்கள் பதினாறும் நாள் போலீஸ் தடையை மீறி அ.தி.மு.க.வினர் ஊர்வலம் நடத்தியிருக்கிறார்கள். இருபத்தொரு பேர் கைது செய்யப்பட்டனர் பின்னர் இருபது பேர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர். அந்த நகரத்தின் அ.தி.மு.க. அமைப்பாளர் ஜெபச்சந்திரன் என்பவர் மட்டும் ஜாமீனில் போக மறுத்து விடவே பதினைந்து நாட்கள் காவலில் வைக்க சப்-மாஜிஸ்திரேட் உத்தரவிட்டிருந்தார்.

காவலில் இருக்க விரும்பாத ஜெபச்சந்திரன் உடல் நலமில்லை என்று கூறி மருத்துவமனையில் சேர்ந்து கொண்டார். போலீஸ் காவலுடன் மருத்துவமனையில் இருந்த காவல் கைதி போலீஸ் நடவடிக்கையை எதிர்த்து மூன்று நாட்கள் உண்ணாநோன்பு இருந்திருக்கிறார்.

தூத்துக்குடி தொகுதி அ.தி.மு.க. எம்.எல்.ஏ. தனசேகரன் மருத்துவமனைக்கு வருகிறார், காவல் கைதியைப் பார்க்கிறார். 'போகும்போது கைதியையும் அழைத்துக் கொண்டு செல்கிறார்! காவல் கைதி கண்டனக் கூட்டத்தில் கலந்து கொள்கிறார். அடுத்த நாள் அமைச்சர் எட்மண்ட் கலந்து கொள்ளும் கூட்டத்திலும் பங்கேற்கிறார்.

இதுதான் இன்றைய தினம் நாட்டிலே நடைபெறுகின்ற 'இராமராஜ்யம்?'

'அன்பே உருவான முதல்வர்

(தொடர்ச்சி 9-ம் பக்கம்)



முப்பெரும் விழாவினை முனைப்போடு கொண்டாடுவீர்!

கழகத் தோழர்களுக்குப் பொதுச்செயலாளர் பேராசிரியர் வேண்டுகோள்

தந்தை பெரியார் அவர்களின்
நூற்றாண்டு விழா-
பேரறிஞர் அண்ணா அவர்களின்
பிறந்த நாள் விழா-
திராவிட முன்னேற்றக் கழகத்தின்
துவக்க நாள் விழா-
மூன்றும் ஒருங்கே கொண்டாடப்படும் வாய்ப்பு- இந்த ஆண்டு செப்டம்பர் 15 முதல் அமைந்துள்ளது.

தமிழ் இனத்தின் பெருமைக்குரிய வாழ்வு, தாழ்வுற்ற நிலையிலிருந்து அதனை மாற்றியமைத்திட, தமிழர்கள் மேற்கொண்டுள்ள இலட்சியப்பயணத்தின் துவக்கத்தைக் குறிப்பது—ஆண்டுதோறும் நமது கழகம் கொண்டாடும் முப்பெரும் விழாவேயாகும்!

குறிப்பாக இந்த ஆண்டு, நமது தந்தை, தன்மான இயக்கத்தலைவர், பகுத்தறிவுச்சுடர், பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவும் கொண்டாடவிருப்பது, மேலும் முக்கியத்துவம் உடையதாகும்.

எனவே இந்த செப்டம்பர் 15 முதல் அறிஞர் அண்ணாவின் 70-வது ஆண்டு பிறந்த நாளையும்—தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழாத் துவக்கத்தையும், கழகத்தின் 30-வது ஆண்டுத் துவக்கத்தையும் மிகுந்த பயன் விளையும் முறையில்—சீரோடும் சிறப்போடும் நாடெங்கும் கொண்டாடுவது நமது தலையாய கடமையாகும்.

தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பிக்கும் முறையில்—கடந்த ஆண்டு—சிதம்பரத்தில் கூடிய கழகப் பொதுக்குழுவில்—'பெரியார் நூற்றாண்டு விழா நினைவுத் தபால்தலை' வெளியிட மத்திய அரசு முன்வர வேண்டும்—என்னும் தீர்மானம் கழகத்தலைவர் கலைஞரால் நிறைவேற்றப்பட்டதை நாடு அறியும். முதலில்—இதற்கு மாறுபாடு தெரிவித்த மத்திய அரசும்—பெரியார் தபால்தலை வெளியிட முன்வந்திருக்கிறது என்பது மன நிறைவு தருவதாகும்.

தந்தை பெரியாரின் தலைமகனாக—
தமிழ் இனத்தின் தன்னிகரற்ற தலைவனாக,
தாய்மொழி காக்கும் போருக்குத் தளபதியாக,
தமிழ் இன உணர்வு தழைக்க வழிகண்ட பேரறிஞராக-
ஜனநாயக மாண்பினை வளர்த்து—
தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த பெருந்தகையாக
விளங்கிய பேரறிஞர் அண்ணா கண்ட வழியிலும்,
காட்டிய நெறியிலும், நாட்டிய கொடியிலும்,
நாடாண்ட முறையிலுமே தமிழ் இனத்தின்
வருங்கால வாழ்வு அமைந்துள்ளது என்பதை நான்
நினைவூட்டத் தேவையில்லை.

தந்தை பெரியாரும்-அறிஞர் அண்ணாவும் உணர்த்திய
தன்மான உணர்வு
தமிழின உயர்வு
தாய்மொழிப் பாதுகாப்பு
மனிதகுல ஒப்புரிமை (சமத்துவம்)
உடன் பிறப்புரிமை (சகோதரத்துவம்)
குடியாட்சி உரிமை (சனநாயகம்)
மாநில சுயாட்சி—மத்தியில் கூட்டாட்சி—

ஆகியன மக்களிடையே பரப்பப்படவும்—நிலைபெறவும்—வெற்றி காணவும்—

எத்தனையோ தொல்லைகளையும், துரோகங்களையும்—துயரங்களையும் கொடுமைகளையும் தாங்கிக் கொண்டு கலைஞர் தலைமையில் வீறு நடைபோடுவது நமது கழகம்.

பெரியாரின் உணர்வு முத்திரையிட்டு அறிஞர் அண்ணாவின் நெறி பதிவு பெற்றுச் செயலாற்றும் சிங்கங்களின் பாசறை திராவிட முன்னேற்றக் கழகம் என்பது உலகறியச் செய்யும் வண்ணம்—முப்பெரும் விழாவினைக் கொண்டாட வேண்டுகிறேன்.

முப்பெரும் விழாவினை செப்டம்பர் 15 முதல் நாடெங்கும்—ஊரெங்கும்

கழகக் கொடியை ஏற்றி வைத்தல்,
பொதுக்கூட்டங்கள்-கலைநிகழ்ச்சிகள் நடத்துதல்;
பெரியார், அண்ணா ஆகியோரின் அறிவுரைகளையும்
பொன்மொழிகளையும் அச்சிட்டு வழங்குதல்;
பெரிய தட்டிகளில் எழுதி வைத்துப் பரப்புதல்;
ஏழை—எளியவர்களுக்கு உணவு வழங்குதல்,
ஏழை பள்ளிச் சிறுர்களுக்குப் பலகை-புத்தகம் வழங்குதல்,
ஆகியவைகளின் மூலம் மக்கள் பாராட்டுமாறு கொண்டாடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், கழகத்திற்குப் புதிய உறுப்பினர்களைச் சேர்க்கும் பணியில், செப்டம்பர் 15 முதல் முனைந்து செயற்பட வேண்டும் என்று தலைமை நிர்வாகக் குழு முடிவெடுத்துள்ளதற்கேற்ப, ஒவ்வொரு ஊர்க்கிளையும் உட்கிளையும் ஏராளமான புதிய உறுப்பினர்களைச் சேர்க்க முன்வர வேண்டும். புதிய கிளைகளையும் (இல்லாத இடங்களில்) உருவாக்க வேண்டும். முப்பெரும் விழாக் கடமைகளில் கழகவளர்ச்சிப் பணியும் ஒன்றாகக் கருதிச் செயல்படுமாறும் நாடெங்கும் உள்ள கழகச் செயலாளர்களையும், செயல் வீரர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

பெரியார் ஊட்டிய இன மானம் காப்போம்!
அறிஞர் அண்ணா வழியில்
அயராது உழைப்போம்!
கலைஞர் தலைமையில் கழகம் வளர்ப்போம்!
என்னும் முழக்கத்தோடு —
முப்பெரும் விழாக் கொண்டாட முனைவீர்!

"அறிவகம்'
சென்னை - 13.
25—8—78

க. அன்பழகன்,
பொதுச்செயலாளர், தி.மு.க.

இந்தியாவுக்குப் புகழ்சேர்த்த தமிழ்ச் செல்வங்கள்!

உலகநாடுகளின் விளையாட்டுப் போட்டி ஒன்று அண்மையில் நிகழ்ந்தது.

இப்போட்டியில் கலந்து கொண்டு வெற்றிக்கொடி நாட்டி—தங்கப் பதக்கமொன்றைப் பெற்றிருக்கிறார் தமிழ் நாட்டைச் சேர்ந்த கருணாகரன் என்னும் இளைஞர்.

இருபத்தோரு வயதான — திருமணமாகாத தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த இந்த இளைஞர் 'பளுதூக்கும் போட்டியில்' சாதனை புரிந்துள்ளார்.

ஏழைக் குடும்பத்தில் பிறந்த கருணாகரன் இன்று உலக அரங்கில் இந்தியாவுக்குப் பெருமை தேடித் தந்துள்ளார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழ்ச் செல்வன் என்ற இன்னொரு இளைஞரும் போட்டியில் வெற்றிக் கொடிநாட்டி வெள்ளிப் பதக்கம் பெற்றிருக்கிறார்.

—அவருக்கும் நமது நல் வாழ்த்துக்கள்!

விடுதலை! விடுதலை! விடுதலை!

நடிகைகளுக்கே விடுதலை!

நடிகை லதாவை அ.தி.மு.கவிலிருந்து விடுவித்து விட்டார்களாம்.

எந்தக் கூண்டில் இதுவரை அவரை அடைத்து வைத்திருந்தார்கள் என்று கேட்டு விடாதீர்கள்!

நடிகர் கட்சியின் அரசியல் அகராதியில் விடுவித்தல் என்பதற்கு எத்தனையோ அர்த்தங்கள் உண்டு!

அரசியல் கட்சியிலிருந்து ஒருவரை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு நீக்கி வைப்பது (சஸ்பெண்ட்) அல்லது அறவே நீக்குவது (டிஸ்மிஸ்) என்பதுதான் வழக்கம்.

ஆனால் நடிகர்கட்சி, விடுவித்தல் என்னும் சொல்லைக் கையாளுவது, புரட்சியாரின் புதிய அரசியல் டெக்னிக் என்று கொள்க.

திரைப்படத்துறையில் புதுப்புது யுக்திகளை (டெக்னிக்குகளை)க் கையாண்டு அலுத்துப் போய்விட்ட ஸ்டண்ட் நடிகர் அரசியலில் புகுந்து விளையாட ஆரம்பித்தால் என்ன ஆகும்? இப்படிப்பட்ட புதுமைகள்தாம் திடீர் திடீர் என வெளிப்படும் இந்தப் புதுமையை வரவேற்காதவர்களை ரசனையில்லாதவர்கள் என்று ரசிகர்கள் ஒதுக்கித் தள்ளிவிடலாம்!

அது கிடக்கட்டும், நடிகை லதாவை ஏன் விடுவித்தார்கள்?

இந்தச் சந்தேகம் எனக்கும் உங்களுக்கும் மட்டுமல்ல; 'சின்ன அண்ணி' என்று நேற்று வரை மதித்து வந்த ரசிகர்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

'சின்னவருக்கும் சின்ன அண்ணிக்கும் என்ன லடாயோ அது நமக்குத் தெரியாது ஆனால் லதா விடுவிக்கப்பட்டார்' என்ற செய்திமட்டும் கொட்டை எழுத்துக்களில் எல்லாப் பத்திரிகைகளிலும் முக்கியத்துவம் கொடுத்து வெளிவந்திருக்கிறது.

நடிகர் கட்சியின் அமைப்புச் செயலாளராக மட்டுமல்லாது மந்திரியாகவும் உள்ள ஒருவர் அவசர அவசரமாக அறிக்கைகொடுக்கிறார் என்றால் அதற்குப் பத்திரிகையில் முக்கியத்துவம் இல்லாமல் போகுமா!

நடிகை லதாவை அவசர அவசரமாக விடுவித்ததற்குக் காரணம் என்ன?

அவர் தனக்கு 'விடுதலை' வேண்டும் என்று கேட்டாரா?

அப்படி ஒன்றும் அவர் கேட்டதாக அமைப்புச் செயலாளரின் அறிக்கையில் கூறக் காணோம்.

— 'சேனு' —

நடிகை லதா கட்சிக்கொள்கைக்கு முரணான வகையில் பக்திப் படங்களில் நடிக்க நேர்ந்துள்ளதாம். அவருடைய தொழில் பாதிக்கப்படக் கூடாதே என்ற நல்லெண்ணத்தில் தான், அவர் விடுவிக்கப்பட்டுள்ளாராம்.

அமைப்புச் செயலாளரின் விளக்கம் இதுதான்.

அப்படியானால் அந்தக்கட்சியின் கொள்கை தான் என்ன?

தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையை நூலிழை பிசகாமல் நூற்றுக்கு நூறு கடைபிடிப்பதுதான் எங்கள் கொள்கை' என்று நடிகர் கட்சி பறைசாற்றுமானால் அதை நூற்றுக்கு நூறும்

(தொடர்ச்சி 9-ம் பக்கம்)



ஏழைகளைச் சிரிக்க வைத்த ஏந்தல்!

பனிப்பார்வை — கனிப்பேச்சு — தனித்திறமை
இனிப்போடு எழிற்காட்சி தருகின்ற
இசைப் புலவன்!
அழைக்கின்ற போதெல்லாம் மக்கட் பணிபுரிய—
வருகின்ற நற்றொண்டன்; சிரிப்பு—
தழைக்கின்ற செந்தமிழன், மழைக் கரத்தால்
மாநாடு காக்கின்ற வள்ளல்
உழைக்கின்ற ஒருபேறே — பெறும்பேறு எனக்
கொண்ட தமிழேறு!
கலையுலகின் தனிவேந்தன் — அலைகடலாம்
அவன் உள்ளம்
நிலைகுலைய நமைவிடுத்து நீங்காத
துயில் கொண்ட
கொடுமை என்னே!
"சிரிப்பொன்றே மனித வாழ்வுக்கு மருந்து
— அதைச்
சிந்தனைத் தேனில் குழைத்து
நாள்தோறும் அருந்து—
நான் உள்ளவரை முடியாது அவ்விருந்து'
என மொழிந்து வாழ்ந்திட்டான் — அந்தோ,
எரி நெருப்பில் வீழ்ந்திட்டான்!
ஏழைகளைச் சிரிக்கவைத்தான்—
கோழைகளை நிமிர வைத்தான்
எமையெல்லாம் கதறவைத்து இறப்புலகு ஏகிவிட்டான்!
படக்கலையில் அறிவுமணம் கமழச்செய்து — நாட்டின்
வலக்கமாய் அமைந்திருந்த 'நல்லதம்பி'
முடக்கலாம் பெருநிதியை எனக்கிளம்பும்
முளி எண்ணம்
முனைமுறிந்து போகும்வண்ணம் 'பணம்'
தந்த பாவாணன்!
விதவைதனை மணமகளாய் ஆக்கிவைத்துக் காதற்
பறவைகளைப் புதுவானம் மேவவிட்ட கர்மவீரன்!
கல்லடிக்கும் — கயவர்தம் சொல்லடிக்கும் மத்தியில்
கூறிவந்த கொள்கைகளை
வல்லடி வம்பர்களும் பல்இளிக்கும் விதத்தினிலே
வில்லடிப் பாட்டாலே விளக்கிவந்த வித்தகனும்
ஆடுகின்ற கோயிலுக்குப் போகின்றான்
பழைய நந்தன் — அறிவு
தேடுகின்ற ஆலயத்தை நாடுகின்றான் புதியநந்தன்
ஓடுகின்றார் உனைக்கண்டு ஓதியமிலார் உள்ளத்தார்—
என மகிழ்ந்தோம்; இன்றோ
உனை இழந்து உளம் நெகிழ்ந்தோம்
இதழ்க்கடையில் புன்னகையைத் தேக்கிக்கொண்டு
மலர்க்கண்ணால் வரவேற்புக் கூறுகின்ற காட்சி எங்கே?
கிளிச்சிறகின் நிறம்போல இலையெடுத்துப் புதுக்
கிளிஞ்சல் சுண்ணும்பும் பாக்கும் சேர்த்து
குதப்புகின்ற கோலச் செவ்வாய் காட்டுகின்ற
குறுஞ்சிரிப்பு முகந்தான் எங்கே?
புனலிலே மிதக்கட்டும் தமிழர் என்றே
துணலாகிப் போனாயோ — கலைத் தலைவா?
வார்முரசம் ஆர்க்கின்ற விடுதலைநாள் —
வானொலி நிலையத்தார் உனையழைத்துப்
பாடச் சொன்னார்!
பெருநாட்டின் விடுதலைக்குப் பாடுபட்ட தலைவர்களில்
பெரியார் ஈ வெ ரா ஒருவரன்றோ—
உரிமை வேண்டும் அவர் பெயரை உச்சரிக்க—
எனக்கேட்டுப்
பெருமைமிகு போராட்டம் கண்டாய்!
தருணமதில் வெற்றி கண்டாய்
'சன்மானச் சீயமன்றோ கலைவாணர் — என வாழ்த்தும்
தமிழ்நாட்டுச் சேனை கண்டாய்'

தங்கம் நிகர் குணத்தினனே!
தமிழ்க் குலத்தின் விடிவிளக்கே!
அங்கமெலாம் பதைக்கவிட்டு
அனல்தேடி ஏன் மறைந்தாய்?

நீரோடை நிலங்கிழிக்கும் நெடியபெருந் தமிழ்நாட்டில்
சீரோடு வாழ்ந்திருந்த கலையரசே! நீ,
வேரோடு சாய்ந்துவிழப் புயல்வீசும் என உணர்ந்தால்
கோடானுகோடிகரம் அப்புயலைத் தடுத்திருக்கும்!
"எதிர்ப்புகளை இளநகைப்பால் இடறிவிட்டு
இன்பத் திராவிடத்தின் விடுதலைக்குத் தலைமையேற்ற
என்தலைவன் அண்ணாவின் அருகிருப்பேன்"
என உரைத்து எழுந்திட்டாய்! அதற்குள்
சாவின் மடிதனிலே விழுந்திட்டாய்
என்னுயிரே! இன்னமுதே என்ன நினைத்(து)
உயிர் விட்டாய்?
"பொன்மலையைக் குவித்திட்டேன்; இன்று புழுதிமலை
அடிவாரத்தில் கிடக்கின்றேன்' எனச் சொல்லிப்
புகழ்மலையின் உச்சிக்குப் போனாயோ?
புதுமணியே! புகழ் முத்தே!
பொதுவுடைமை முளைக்கின்ற 'ருசியா'வில்
கலைப்பயணம் நடத்துதற்குச் சென்றாயே;
அதுபோல எண்ணமிட்டோ பெரும்பயணம்
மேற்கொண்டாய்
எம்மீது பெரும்பழியைச் சுமத்திவிட்டு?

கலையே — கற்பனையே!

அழகே — அறிவே!

அன்பே — அறமே!

யாருண்டு இனிமேலே உன்போல் நல்லோன்?
நீயுண்டு! நின்புகழுண்டு — என்றென்றும் தமிழர்
நெஞ்சில்!

— கலைஞர்

(கலைவாணர் மறைந்தபோது (1957-ஆம் ஆண்டு)
முரசொலியில் எழுதிய கவிதை)

முப்பெரும் தத்துவ மோதிரங்கள்!

மேற்படி மோதிரங்கள் பஞ்சலோகத்தால் தயாரித்து 22 காரட் கோல்டு பிளேட்டிங் செய்யப்பட்டது. பல ஆண்டுகள் உழைக்கக் கூடிய ஒரு மோதிரம் விலை ரூ. 15. தபால் செலவு தனி. உங்களுக்கு தேவையான மோதிரத்தைக் குறிப்பிட்டு உங்கள் விரல் அளவை நூலில் எடுத்து, ரூ. 3 அட்வான்சுடன் அனுப்பினால், மீதி தொகைக்கு நீங்கள் விரும்பும் மோதிரத்தை V. P. P. மூலம் அனுப்பிவைக்கிறோம்.

தயாரிப்பாளர்: சக்தி. ஜி சம்பந்தன்
42, பள்ளிக்கூடத் தெரு, (சத்திரம் பிளாட்)
பட்டாபிராம்-சென்னை-600 072.

சென்னையில் கிடைக்குமிடம்: "போட்டோ வினஸ்" 104, C.N.K. ரோட், சென்னை-600 005.

"பாட்டுக்குப் பாட்டெடுப்பேன்...."

'தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாயின் மகன் கடந்த தேர்தலின் போது ரூபாய் எண்பது இலட்சம் வசூல் செய்துள்ளார். இந்த உரிமையை அவருக்கு அளித்தது யார்?'

—ஜனதாக் கட்சித் தலைவர்களில் ஒருவரான மதுலிமாயி.

"கடந்த தேர்தலின் போது மதுலிமாயி வசூல் செய்த பணத்திற்குக் கணக்கு எங்கே?"

—ஜனதாக் கட்சிப் பொருளாளர் சி. வி. குப்தா.

★★★

மத்திய-மாநில உறவுபற்றி வழக்கறிஞர்கள்!

மத்திய — மாநில அரசுகளுக்கு இடையே உள்ள உறவை மறு பரிசீலனை செய்யவேண்டும் என்றும், கடந்த இருபத்தெட்டாண்டுக் காலத்துப் படிப்பினைகளைக் கொண்டு — தேவைப்படும் மாற்றங்களை அரசியல் சட்டத்தில் செய்ய வேண்டும் என்றும் புதுடில்லியில் நடந்த கருத்தரங்கமொன்றில் வழக்கறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

'குடியரசுத் தலைவர் ஆட்சி' என்ற பெயரால் — ஒருமாநிலத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியை நீக்குவதற்கு — அனுமதிக்கும் பிரிவை அரசியல் சட்டத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும் எனவும் அவ்வரங்கில் கருத்துக்கள் கூறப்பட்டன.

நம் நாடு
ஆசிரியர்: மு. கருணாநிதி

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 25-00
ஆறுமாத சந்தா ரூ. 12-50
மூன்று மாத சந்தா ரூ. 6-25

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இறவாப் புகழ் பெற்ற எம் கலைவாணர்!

ஆடுநரும் பாடுநரும் அருங்கவிதை ஆக்குவோரும் உளர். நிரம்ப உளர்.

புலமையின் பொலிவினை நல்குவோரும், அறம், அருளு—மை அஞ்சாமை எனும் நெறிதரும் திறத்தினரும் பலர் உளர்.

வாழ்வுக்கு வழி கூறுவோரும்; வறியோருக்கு உதவுவோரும் தொழில் நுட்பம் உரைப்போரும், துரைத்தனம் நடாத்துவோரும் தொகை தொகையாக உளர்.

ஆனால், இவை அத்தனையும் திரண்டெழுந்து ஒருருவில், நம்மிடை உலவி நமக்காகப் பணியாற்றி நமது உயர்வு கண்டு உளமகிழ்ந்து, நாட்டின் ஏற்றம்கண்டிட நாளெல்லாம் கலைத் தொண்டாற்றி வந்த, நகைச்சுவை அரசு, அவர் ஒருவர்தானே காலமே! முடிபறிந்தாய். மூதாதையர் விட்டுச் சென்ற முத்தமிழைக் குலைத்தாய்! எழிலூர்களையெல்லாம் கடலடி கொண்டு சேர்த்தாய்! மாற்றாரின் தாளிலே எமது சிரம்படும் சீரழிவினையும் செய்து செருக்குற்றாய் ஆறுதலளிக்க விழித்திடச் செய்ய, எழுச்சிபெற வைத்திட, எமக்கெனக் கிடைத்த ஒரே ஒரு உத்தமக் கலைஞனையுமா கொண்டு செல்ல வேண்டும்? கன்னெஞ்சனும், கண்ணைப் பறித்தாலும், கைக்கோலேனும் தருவானே! எமக்கெல்லாம் கலங்கரை விளக்காகி நின்ற கலைவாணரையுமா நாங்கள் இழந்திட வேண்டும். ஏன்? ஏன்? அந்தோ! ஏனோ இக்கொடுமை? எதற்கோ இத்துணை வேதனை எமை வந்து தாக்குவது?

தமிழன் தலை நிமிர்ந்து நடந்திடத்தான் போகிறான், தளைகளை உடைத்தெறிந்துவிட்டுத் தன்னாட்சி காணத்தான் போகிறான்—அதோ காணீர் அவன் கண்களிலே ஓர் புத்தொளி அவன் பேச்சிலே ஒரு புதுத் தெளிவு. அவன் சிந்தனையிலே ஓர் புதுமை. அவன் செயலிலே ஓர் செம்மை—என்றெல்லாம் மார்தட்டிக் கூறி வந்தோம்—அந்த நிலைக்குச் சான்றுண்டோ என்று கேட்டோருக்குக் கெக்கலி கொட்டவும் கேளிக்கை காணவும், இதுநாள் வரை பயன்பட்டு வந்த கூத்து மேடை கோமாளி ஆட்டம், இன்று எமது நகைச்சுவை அரசின் கரம் பட்டு, கருத்தளிந்து, களிப்பு மளித்து, கலைவிருந்தாகி, அதே போது மக்கள் தம் உளப் பாங்கினை உயர்த்திடும் வாய்ப்பளித்து, தனிச் சிறப்புடன் துலங்குவது காணீர்!

இந்த எழுஞாயிறு எதற்குச் சான்று பகருகிறது என்பதனை எடுத்தியம்பவும் வேண்டுமா என்று இறுமாந்து கூறினோம் எரி தழலில் இட்டு விட்டோம் நமதுஏந்தலின் உடலை!

ஆசிரியராக மருத்துவராக ஆடுநராக, அருந்தோழனாக தப்படிப்போனாக, எடெழுதுவோனாக, இஞ்சிப் பத்தனாக எத்தர் தம் குட்டினை எல்லாம்

★★★★! ★★★★! ★★★★★

—பேரறிஞர் அண்ணா

★★★★★★! ★★★★★! ★★★

உடைத்திடுவோனாக. எண்ணற்ற 'வடிவம்' பூண்டு உலகுலே காணக் கிடக்கும் மூடத்தனங்களை எல்லாம் கேட்போர் முகம் சுளித்திடாத முறையில், தித்திக்கும் கலை கலந்து தெவிட்டாத முறையில், நகைச் சுவை தந்தன்றோ முறியடித்து வந்தார்.

நாட்டு மக்களுக்கு நகைச் சுவை அளித்திட நாலாறு பேர், நான் நீ என்று போட்டியிட்டுக் கொண்டு வருவர்—உளர்—ஆனால் கலைவாணர் போல இதயத்தில் இடம்பெற வேறு எவருளர்—எங்ஙனம் இயலும்? கலைவாணர்' ஒரு தனி மனிதர் மட்டுமல்ல; நாடு பெற்ற ஓர் தனிச் சிறப்புடை—வாய்ப்பு-மலடி வயிற்று மகன்—புறையல் எடுத்த தனம்—தனிச் சிறப்புடை காலக் கூறு—பொன்னொளி!

கலை அழகு இனியும் கிடைக்கும்—சுவையும் பெறுதல் கூடும்—ஆனால் இவை மக்களின் நிலையினை உயர்த்திடும் பயன்தரல் வேண்டும் என்ற நோக்குடன் பணியாற்றிடத் தக்கார் முன்வருவரோ?

அவர் (கலைவாணர்) கலைத் துறையில் இருந்ததால் அதன் மூலம் தமது கருத்தினை அளித்து, மக்கள் வாழ்வாங்கு வாழ்தல் எனும் குறிக்கோளை நடாத்திக் காட்டினார். எனினும் வேறு ஏதேனும் துறையிலே இருந்து பணியாற்ற நேரிட்டிருப்பினும், கலைவாணர், இதே போலத்தான், இதம் தருவோராக, இல்லாதாரிடம் அன்புகொண்டோராக. அவர்களை உயர்நிலைக்கு அழைத்துச் செல்லும் உற்ற தோழனாக விளங்கி இருப்பார். கலைமூலம் அவர் தமது தொண்டினைச் செய்தார்—பெருமளவு செய்வதற்கு அந்தத் துறை வாய்ப்பளித்தது. வளம் அளித்தது—ஆனால், சிறப்பாகப் போற்றப்பட வேண்டியது, அவருடைய தொண்டு உள்ளந்தான்!

கலைவாணர் ஏழைக் குடும்பத்திலே பிறந்தார்—ஏழைக் குடும்பம் கண்டு கலங்கும் எல்லாவிதமான அவல நிலைமைக்கும் ஆளாகத்தக்க நிலையில் தான் தன் குடும்பத்தை விட்டுச் சென்றிருக்கிறார். நாடு வாழவும் மக்கள் முன்னேறவும். தன் திறமத்தனையும் செலவிட்டார்—கலை உலகு அவர் காலடியில் கொட்டிய பல இலட்சங்களை, அவர் வாரி வாரி இறைத்தார்.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை. உயிர்க்கு என்ற வள்ளுவர் வாக்குக்கு ஒப்ப நடந்து கொண்டார்

அவருடைய ஈகை உயிருடம் நிரம்பியதாக இருந்தது. பெற்றவர் பிறகோர் நான் கொடுப்போராகத் தக்கவண்ணம் அவர்களை உயர்த்தி, நிலையினை மாற்றி அமைத்தது, ஒரு 'தலைமுறை முழுவதும் பேசிடலாம் அவருடைய 'ஈகை' குறித்து. அதனால்தான் அவர் இறவாப் புகழ் பெற்றார்.

நமது நெஞ்சிலெல்லாம் கலைவாணர் நீங்காத இடம் பெற்று விட்டார்,

(திராவிடநாடு 8—9—1957)

தமிழினத் தலைவருக்கா ஓய்வு?

தமிழகத்தின் விடிவெள்ளியான இந்திய சனநாயகத்தின் வழிபாட்டுக்குரிய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு,

நடிகர் இராமச்சந்திரன் யோசனை கூறுகிறார்.

"அவர் ஓய்வெடுத்துக் கொள்ளட்டும் அவர் நிறைய சிந்திக்கவேண்டும்'' — என்று தன் நாக்கொழுப்பைச் சிந்தியிருக்கிறார் நடிகர்.

அற்பனுக்கு வாழ்வு வந்தால்......? என்ற பழமொழிக்கு இந்த மனிதர் எவ்வளவு சரியாகப் பொருந்துகிறார்!

நாடாளுமன்றத் தேர்தலில் அமோக வெற்றி பெற்ற—ஜனதா கட்சிஆட்சிப்பொறுப்பேற்ற பின்னால் — நடைபெற்ற நாடுதழுவிய இடைத் தேர்தல்களில், இந்திரா காங்கிரஸ் பெருவாரியான வெற்றியைப் பெற்றது.

அந்த நேரத்தில் மொரார்ஜியைப் பார்த்து இந்திரா காந்தியார் ஒரு சிறு அசம்பாவம் நிறைந்த வார்த்தையைக் கூட சிந்தியதில்லை.

அரசியல்வாதிக்கும் அரசியல்வாதியாக நடிப்பவருக்கும் உள்ள வித்தியாசம் இது தான்!

சந்தர்ப்பவாதிகளை உள்ளடக்கிய ஒரு தற்காலிகக் கும்பலைத் தன்னிடம் வைத்துக் கொண்டிருக்கும் நடிகர்—காலத்தாலும் அழிக்கமுடியாத லட்சியங்களுக்குத் தலைமை வகிக்கும் தமிழினத் தலைவரான கலைஞரைப் பார்த்து புலம்புகின்றபோது ஒன்றை உணரவேண்டும்.

தேர்தலில் ஏற்படும் வெற்றி தோல்விகளை வைத்துக்கொண்டு -ஓய்வுகொடுக்க நினைக்கும் நடிகர் நிரந்தரமாக அரசியல் ஓய்வு பெறப் போகும் 'திருநாள்' வெகு தூரத்தில் இல்லை!

வரலாற்றுக்கு மகுடமாக இருப்பவர் கலைஞர்!

அவரிடம் அரசியல் விளையாட்டு விளையாடுவது எவ்வளவு ஆபத்து என்பதை நடிகர் உணரத்தான் போகிறார்.

இரண்டாவது உலக மகா யுத்தத்தில் மாபெரும் வெற்றியை ஈட்டிய இங்கிலாந்தின் வரலாற்று நாயகர் சர்ச்சில் அடுத்த பொதுத் தேர்தலில் தோல்வியைத் தழுவினார்.

சர்ச்சிலுக்குத் தோல்வி ஏற்பட்டபோது — இங்கி

★★★★★-★★★★★★★

வெற்றி கொண்டான்

★★★★★-★★★★★★★

லாந்து அதிர்ச்சியடைந்ததே தவிர—வெற்றி பெற்றோருக்கு 'பராக்குக்' கூற வில்லை.

காரணம் ம. பொ. சி.கள் அங்கு இல்லை! அந்த நேரத்தில், எந்த அரசியல்வாதியும் சர்ச்சில் ஓய்வு பெறவேண்டும் என்று ஊளையிடவில்லை' ஏன்? புத்திசுவாதீனமுள்ள யாரும் சர்ச்சிலை எதிர்த்திடவில்லை!

அமெரிக்காவின் வரலாற்று மண்டபத்தில் வான்புகழை ஈட்டிய ஆபிரகாம் லிங்கன் ஆரம்பத்தில் தோல்விகளைத் தொடர்ந்து தழுவினார்.

இறுதியாக வெள்ளை மாளிகையில் அமர்ந்து நிறைவேற்று மைக் கொடுமைகளை அழித்தார்.

லிங்கனுக்குத் தோல்விகள் முன்னேயும் வெற்றிகள் பின்னேயும் தொடர்ந்த போது அவர் ஓய்வு பெற வேண்டுமென்று எவரும் சொன்னதில்லை.

ஏன்?

அந்த மண்ணில் புத்தியில்லாத எவரையும் பொது வாழ்க்கையில் பிரவேசிக்க மக்கள் அனுமதித்ததில்லை!

லிங்கன் ஈட்ட வெற்றியை, சர்ச்சில் பெற்ற சரித்திரப் புகழை கலைஞர் ஈட்டிடும் நாள் ஒன்றும் வெகு தொலைவில் இல்லை.

தண்ணீருக்கு மேலே மிதக்கிற பதர்களைப்போல் போலியான வெற்றியில்மிதக்கும் நடிகர் இதை உணர வேண்டும்.

கழகத்தின் "புறநானூற்றுப் புரவலர் பொதுச்செயலாளர் பேராசிரியர்,' ஒரு முறை அல்ல — பலமுறை கூறியுள்ள மணிவாசகத்தை மீண்டும் ஓர் முறை நினைவு கூர்வோம்.

"அரசியலில் எங்கட்கு எதிரி யாருமில்லை. காரணம் எங்களை எதிர்க்கும் தகுதி எவர்க்குமில்லை''.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒவ்வொரு தொண்டரும் தங்கள் இதயத்திலே எழுதிக் கொள்ளவேண்டிய மணிவாசகமாகும் இது.

குறுந்தாடி - குள்ளத்தாடி நெடுந்தாடி - வெள்ளைத்தாடி
இப்படிப் பல தாடியுடனே
புராண அங்காடி விரித்துப்புளிக்கும் பழங்கஞ்சி
சுவைத்துப்
போதையேறிக் கூத்தாடும் பூசுரர்கள் கூட்டம்
மாசு மரு அற்றிருந்த மண்டிலத்தின் ஓரம்
மாடுகளை - ஆடுகளை - மனிதர்களை வெட்டிப் பிண
மேடுகளை வேள்விக்கெனக் குவித்து வந்த வேளை!
ஆரியரின் படையெடுப்பால் - இல்லை
இடை நெளிவால் - கடைவிழியால் - இருடிகளின்
இன்பரச பானத்தால் - இருண்டுவிட்ட தென்புலத்தில்
ஏற்றிவிட்ட விளக்குப்போல எழுந்துநின்றான் இலங்கை
வேந்தன்!
அவன் சரிதம் சொல்வதென்றால் . தசையெல்லாம்
ஆடுதய்யோ! திசையெட்டும் புகழ்சேர்த்த
தென்னிலங்கைக் கோமான்—திராவிடரின் மூதாதை!
பழந்தமிழின்பால் பற்றுதலை வைத்தநம் பாட்டன்!

★ ★

கண்ணுக்குள் பாவைபோல் இலங்கைத் தீவு;
கருவிழிதான் ஆழ்கடல்கள்' தமிழ்
மண்ணுக்குப் புகழ் தந்த பெருவீரன்;
உருவில் சிங்கம் - உள்ளம் தங்கம்; யாழ்ப்
பண்ணுக்கு யாரும்நிக ரில்லையென வாழ்ந்த
யாழ்ப்பாணத் திருநாட்டான் - மலைத்தமிழன்!
அவன்துணைவி, வண்டமரும் பூங்குழலாள்
மண்டோதரி - மாதர்குலமாணிக்கம் – எதிர்வீணைமீட்டும்
பேச்சுக்காரி இராவணனின் யாழோசை
தோற்பதெல்லாம் பத்தினியின் பள்ளியறைக்
கனிமொழியின் முன்னேதான்
இமைக்கதவு உண்டே எழில்விழியைக் காப்பதற்கு;
அப்படித்தான் – இலங்கைக்கு இராவணன்!
அவனுக்கு அவள்
காடுகளில் நமதெல்லைக் கோடுகளில் ஆரியர்கள்
கடவுளுக்குப் பலிதேடும் வேலை - ஆகாது
கொடுமையென உருவினான் கொடுவாளை'
பர்ணசாலை அமைப்புக்கள் முத்தமிட்டன
அவன்தாளை - அந்தப்
பருவமங்கையரின் சிரிப்போ பிளந்த பாளை!
அட, தொடுவேனோ ஆரியத் தேளையென
எதிர்ப்புக்குரல் கொடுத்தான் அந்தக்காளை'
நரிகள் உள்ள காடெல்லாம் நயவஞ்சகர் உலவும்
நாடெல்லாம் காவல் - காவல் அந்தப் படைகளுக்கு
இராவணன் காலம்காட்டும் சேவல் - சேவல்

★ ★

தமிழரசி முத்துநகை இராவணனின் தங்கை
தண்டகாரண்யத் தவசிகளை எதிர்த்து ஊதிவிட்டாள்
சங்கை!
வேங்கையெனக் கிளம்பிவிட்டாள் வீரர்குல மங்கை'
வேத மோதிகளின் விழிகளிலே வழிந்திடுதே கங்கை!
துரோகத்தால் சூழ்ச்சியினால் தமிழர்களைத்
தோற்கடிப்பதன்றித் தோள்வலியால்
ஆகாதெனக் கண்டு விட்டதாலே
சின்னவனும் இலக்குவனும் சீதையெனும் மனையாளும்
பின்தொடரப் புறப்பட்டான் இராமனெனும் மன்னன்!
தம்பிக்குக் கேடிழைத்து முடிசூட முனைந்து
நம்பிக்கைத் துரோகியென நாடெல்லாம் இகழக்
காடேகி விட்டவன் அந்த ராமன் எனும் கயவன்;
அவன் ஒருநாள்,
காட்டோரம் திரியும்போது . கரும்பனைய முத்துநகை
களைப்பினால் தூங்குகின்றாள் கனிமரச் சோலையோரம்;
காமத்தால் கருத்திழந்த கசடனவன்,
கமலமலர்க் கண்மூடித் தூங்குகின்ற தூயவளை



துன்மார்க்கத்தால் கெடுத்திடவே - தம்பி
துணையோடு அருகே போனான்;
காவலுக்குக் கைகாரி சீதாதேவி;
காவலின்றித் தூங்கிவிட்ட முத்துநகை
கற்புக் கனல்காக்கக் கொதித்தெழுந்தாள்
கனிமரம்போல் தனியொருத்தி இருமந்தி
என் செய்வாள்?
கற்புக்கு விலையாகக் கரமிழந்தாள்! மூக்கிழந்தாள்!
முத்துநகை கொட்டுகின்ற பல் இழந்தாள்!
அம்மவோ! முலையிழந்தாள் – ஆயினும் கற்பு
நிலையிழந்தாள் இல்லை!
தலையிழந்து போயினும் மானங்காக்கும் தமிழச்சி,
இராவணனின் தங்கச்சி!

★ ★

சூதறியாச் சோதரியைச் சூர்ப்பனகை ஆக்கிவிட்ட
காதெரியும் செய்தி கேட்டான் -
கண்ணிலேபுண் பெற்றதுபோல் காட்சி தந்தான்
கடலாளும் புவிவேந்தன் முத்துநகை
அண்ணனன்றோ?
படர் உறவு இல்லாவிடில்தான் என்ன?
இலங்கைக்கு அவளோர் பிரஜையன்றோ?
எழுந்து விட்டான் பழிவாங்க காலை
இளம்பரிதிபோல் கண்களிலே சிவப்பு தேக்கி!
வேந்தன் வரும் செய்தி கேட்டு விழியழகி – சீதாதேவி,
பாந்தமுள்ள மானொன்று வேண்டுமென்று
பர்த்தாவை விரட்டி விட்டாள்!
"அண்ணனில்லா நேரத்தில் அண்ணிக்கு
வலைவீசும் நினைப்போ தம்பி?
முன்னவன்பின் ஓடு நீயும்" - எனத்துரத்தித்
தென்னவன் வருகைக்குக் காத்திருந்தாள்!
தீ பறக்கும் கண்ணுடனே தேர் போல வரும் வீரன்
தேன் மொழி கொட்டிச் சீதை தெருவாசல் வருதல்
— கண்டான்!
'மூத்தவனும் இளையவனும் ஓடிவிட்டார் – எனக்கு
ஏற்றவன் நீ வந்துவிட்டாய்...என்னை உனக்குத்
தந்து விட்டேன்' எனத் தழுவினாள்,
இராவணனின் தடந்தோளில்,
படர்முல்லை போலப் பைந்தொடி சீதாதேவி!
என்னுயிர்த் தங்கைக்கு இடையூறு விளைத்தவனின்
— மனைவி நீ
உன்னுடலைக் காக்கைக்கும் கழுகிற்கும்,
காமங் கொள் கரடிக்கும் அளிப்பதல்லால் –
கரம்படவும் விடமாட்டேன்; கப்பலிலே ஏறென்றான்!
'மானத்தைக் கப்பலிலே ஏற்றிவிட்ட
மரபினிலே வந்தவனின் துணைவி - என் உடல்
தானத்தை ஏற்றிடுக என உரைத்தபடி
உரம்பெற்ற அவன் மார்பில் சாய்ந்திடவே – எப்படியும்,
வரம் பெறுவேன்' என நினைத்து –
கலம்ஏறி நின்றாள் – பீடுநடைச் சிங்கம்பின்,
ஒரு பெண் நரிபோல்!

★ ★

"சிறையெடுத்துப் போன சீதா தேவிதனைச்
சிங்கா தனத்திலேற்றிப் பட்டத்து ராணியாக்கிடுவான்;
சீதைக்கோர் செல்வனுதித்தால்
இலங்கைச் செங்கோலில் அவனுக்கும் பங்கு;
பனநுங்கு போலப் பார்ப்பனர்க்கோர் தேசம்
பாடுபடாமல் வருவதென்றால்
பதினாயிரம் சீதை போனால் தானென்ன மோசம்" –
இப்படி ஆரியர்கள் நினைத்தபடி நடக்காமல்,
செப்படி வித்தைக்காரி சீதைக்குச் சிறைச்சாலை
ஏற்பாடு செய்துவிட்டான் இலங்கைக் கோமான்!
'வேதமென்றும் வேள்வியென்றும்
விளம்புகின்ற கூட்டம் தன்னை
விறகொடித்து வருதல்போல்,
விலா எலும்பொடித்து வருக' என்றான்!
வெற்றி வேந்தனுக்கொரு தம்பி வீடணன்
வேங்கை மரத்துப் புல்லுருவி,
அண்ணனைச் சாய்த்துவிட்டு அரசாளக் காத்திருப்போன்
அனுமன் எனும் ஐந்தாம்படை யொன்றின் கையினிலே
அக்கினிக்கோல் எடுத்துத் தந்து,
'அழித்திடுக – இலங்கைமா நகரை' யென்றான்!
தென்னிலங்கைச் சீமை யெங்கும் தீக்காடு – பிணக்காடு!
குணக்கேடன் வீடணனின் ஒத்துழைப்பால்!
குலம்வளர வழிகண்டார், குள்ளநரி ஆரியர்கள்!
தமையனும் வாலியெனும் தமிழ்வீரன் தன்னைத்
தர்ப்பைகளின் சூழ்ச்சியினால் கொன்றுவிட்ட கொடியன்;
சுயமரியாதையை விலைகேட்கும் சுக்ரீவன் என்போன்
கண்சுழற்றும் ஆரியரின் காலடியில் வீழ்ந்தான்!

★ ★ ★

தம்பியிடம் நம்பிக்கை வைத்திருந்த தங்கம்
தரணியெல்லாம் நடுநடுங்க ஆண்டுவந்த சிங்கம்
கடல்அலைமேல் எதிரிகளின் படைகள் வரக்கண்டு
'உடன்பிறப்பே விபீஷணா - உடன்கிளம்பு' என்றான்
'படமெடுக்கும் பாம்போடு விளையாட்டு வேண்டாம்;
கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கிடுவாய் அண்ணா;
உடன்சென்று சரணடைவோம் – வந்திடுக என்றே மதுக்
குடங்காட்டும் ஆரியருக்குப் புகழ்பாடி நின்றான்!

★ ★ ★

தம்பியின்
குரங்காட்டம் கண்டுவிட்ட தென்னவனும் – கண்கள்
குளம்காட்ட, 'குலங்கெடுக்க வந்தவனே'
கோடரியின் பிடியே! கொடியஉன் நாக்கை
அறுத்தெறியாமல் இருந்ததற்கு நன்றி சொல்லி
நடத்திடுக' எனநடந்தான் களம்நோக்கி!

★ ★ ★

ஒருகருவில் ஊறிவிட்ட உத்தமனும் — சிந்தனை
உறக்கத்தில் வல்லவனும், எழில் —
கும்பகர்ணனெனும் தம்பி, அண்ணன்
இடையினிலே இருக்கின்ற உடைவாளைப் போல
படைமோதும் இடம்நோக்கிப் பின்தொடர்ந்தான்
பாய்ந்து!
கடைக்குட்டி தம்பியவன் எதிர்வந்து நின்றான்;
'ஐடைகட்டி வாழுகின்ற ஆரியரை ஜெயிக்கப்
படைதிரட்டிப் பயனில்லை - பாழாகும்' என்றான்!
'துரோகக் கடைகட்டி வாழுகின்ற தம்பியல்ல நான்;
நாசத்தின் பிறப்பிடமே நடைகட்டு' என்றே
மடையுடைந்த வெள்ளம்போல் சீறிவிட்டுச் சென்றான்!
"என்னருமை வீரர்களே! ஏற்றங்கொள் தோழர்களே!
இன்றிந்தத்தென்னிலங்கை ஆண்டிருக்கும்
இராவணன் நான்
இழிதொழிலோர் – பண்பிழந்தோர் — எத்திப்
பிழைப்போர்
அவரை நத்திக்கிடப்போர்,
அனைவரையும் அரைநொடியில் அழித்துவிடப்
போர்க்கோலம் பூண்டுவிட்டேன்;
புலிநிகர் நண்பர்களே...
'பொல்லாத புரோகிதர்கள் - படை இல்லாதவர்'
என்றிருந்தேன்;
பாவையரைப் பாசறையாய் ஆக்கிக்கொண்டு
தேவையுள்ள படைகளையெல்லாம் குவித்துவிட்டார்;
கோவை இதழ் — கொய்யாக்கன்னம் —
போர்வை உடல் கொண்டுவிட்ட
இளங்குமரிகளால்,
இனத்திலுள்ள மன்னரெல்லாம் இருடிகள் பால்
சாய்ந்துவிட்டார்;
முழுநிலவு முகங்காட்டி – முனிவர்களின் பெண்டாட்டி
முடிமன்னர்களை வாட்டிவிட்டார் – தமிழ்க்
கொடிபறந்த கோட்டை யெல்லாம்
மடியேந்தும் ஆரியர்க்கு மடங்களாய்ப் போனதய்யோ!
அருமைத் தம்பிக்குத் தீமை சூழ்ந்து
ஆரண்யம் ஓடிவந்த இராமன்;
எருமைக்கு மில்லாத தடித்த தோலன்;
இழிசுக்ரீவன் இவனுக்குத் தோழன்;
அண்ணனுக்கு மரணம் தந்தோன்
இன்னொருவன் – அனுமன் எனும் துரோகியுடன்
இலங்கைக்குத் தீவைத்த எந்தன் தம்பி!
இவர்கள் எல்லாம் எதிர்க்கின்றார் என்னையென்றால்,
இதிலேதோ மர்மம் இருக்கத்தான்வேண்டுமன்றோ?
நான்,
சீதைக்கோர் மகன்தந்து, இலங்கைச் செங்கோலும்
அந்த மகனுக்கே தந்துவிடவேண்டு'மென்று
தீப்பந்தனைய நிபந்தனைகள் போடுகின்றார்

தீய இராமனது கூட்டத்தார்;
பூப்பந்தனைய பொன்மகளாம் - என் துணைவி
பாப்புனையும் புலவர்க்கும் கிட்டாத பைந்தமிழாம் –
கோப்பெருந்தேவியவள், குளிர்நிலா! வைரக்கட்டி
அந்த யாழ்மீட்டும் பாணனுக்கு, சீதையெனும்
பாழ்பட்ட வீணை ஏன்? சிறிது
நாள்பட்டே நம்நாடும் ஆரியர்களின்
தாள்தொட்டு வணங்குதற்கு வழிதிறவேன்!
விழிமூலம் வீரத்தைக் காட்டுகின்ற வீரர்காள்
மொழிமீது ஆணை தந்து புறப்படுவீர் –
முள்ளம்பன்றிகளைப் பழிதீர்த்துத் திரும்பிடுவோம்' என
முரசறைந்தான்! முதுகுன்றத் தோளுடையான்!
அதுகேட்டு அனைவருமே ஆர்ப்பரித்தார்.
கொலை மணக்கும் போர்க்களத்தில்
இருதரப்புப் படைகளுமே ரத்தங்கொட்டும்
தலைநொறுங்கிச் செத்தவரும் குடல்கிழிந்து போனவரும் –
தமிழினத்தார்! ஒருகுலத்தார்!
மலையோரம் மரத்தோரம் மறைந்திருந்து
எலிபோலப் போரிட்டான் எதிரி ராமன்
அம்புவியில்கண்டதில்லை இம்முறை!
'அம்புவில்லை யெடடா' என்று
கும்பகர்ணன் கொதித்தெழுந்தான்; அதுகண்டு
குதித்தோடும் ராமன் தன்னை; 'கோழையே திரும்பு'
- என்றான்.
கரும்போ உயிரென்று களிறுபோல் முழங்கி நின்றான்!
முடிக்கவில்லை அவன் பேச்சை.. முதுகுப்புறத்தினிலே ..
சரமாரி பொழிந்து விட்டான் சண்டாள இலக்குவனும்
ஆனையெனச் சாய்ந்துவிட்ட அன்புத் தம்பிதனைச்
சேனைதனை நடத்திவந்த செந்தமிழன் கண்டுவிட்டான்;
சிந்தையெலாம் அணுவெல்லாம் தழல்பறக்க,
'பூனைகளே நில்லுங்கள்' எனச் சொல்லிப்
பூட்டி விட்டான் . போர்க்கணையை!
குளிர்மேகம் கொட்டுகின்ற மழைதானோ —
கோடையிலே அதிர்கின்ற இடிதானோ எனப்
புயல்வேகம் புதுவேகம் கொண்டு விட்டான்!
வேல்பட்ட புலிபோல – விடுபட்ட கணைபோல –
அணைகெட்ட வெள்ளம் போல - ஆயிரம்
வாள்பட்ட மார்புடையான், போரிட்டான்!
கால்பட்ட பிடரியுடன் கயவர்களும் மறைந்து போனார்!
'ஒழிந்ததடா பகையென்று நகைமுழக்கம்
செய்துவிட்டுத் திரும்புகின்ற வழிதனிலே
ஒளிந்திருந்து ஆரியர்கள் ஓரம்பு வீசி விட்டார்!
மார்பினிலே பட்டகணை வெட்டித்தள்ளி,
'யாரடா கோழை' யென்று வாள் ஓங்கித் திரும்பி
விட்டான்!
ஓடுதற்கு வழியின்றிச் சிக்கிவிட்ட இராமன் கூட்டம்
தேடுதற்கும் திசையின்றிப் பஞ்சாய்ப் போகும்!
'கன்னலடா எந்தன்நாடு; அதை
இன்னலிலே மாட்டிவிட்ட உங்களுக்கு இந்த
வாள்வீச்சு மின்னலடா' எனக்கூறிச் சுழற்றிவிட்டான்
சூறுவளிதனையும் சூழ்ந்தெதிர்க்கும் கீர்த்தி பெற்றோன்!
'இனி நிலைமை மோச'மென்று, ஆரியக்
கனிசுவைக்கும் வீடணன் கண்டுவிட்டான்;
ஈட்டியொன்று அவன் கையில்; எறிந்து
விட்டான் அண்ணனது முதுகின் பக்கம்!
மறைந்திருந்து பறந்துவந்த அந்தஈட்டி - அவன்
மலைப்பாறை முதுகினிலே ஊடுருவி — மார்பகத்தில்
தலைநீட்டி - கண்ணீர் கொட்டும்
இமயமலை சாய்வதுபோல் இராவணனும்
வீழ்ந்துவிட்டான்
"எனைக் கொன்றவன் என்தம்பி,
பனைமரத் தோளுடையான் - கையிலே
பார்ப்பனரின் தாளுடையான்;
உயிர்பிழைக்க மருந்துண்டு – ஆனால் - எந்தன்
உடன்பிறப்பு ஒளிந்திருந்து
போரிட்டான்' எனக்கேட்டுச் சாகின்றேன்"!
இதுகேட்டுச் செத்ததுபோல் ஆகிவிட்டார்
இலங்கை மந்தர்!

தலைவர் கலைஞரின் வேண்டுகோளுக்கிணங்க

புயல் - வெள்ளத் துயர் துடைப்பு நிதி!

(அனுப்பியோர் பட்டியல்)

13—8—78 இதழ் தொடர்ச்சி

சென்னை—24 பார்த்தசாரதி. கே. கே நகர் எம் பால்ராஜ். கே. ஆர். வேலு, எஸ் அண்ணாமலை. லெட்சுமிபுரம் அண்ணாமலை, பழைய மாம்பலம் சுந்தரம் ராஜா அண்ணாமலைபுரம் தாந்தோணி கே கே. நகர் ராதாகிருஷ்ணன். விருகம்பாக்கம் கல்யாணி சென்னை — 83 கே. ஜெயராமன்; சென்னை—6 டி சித்திராபுத்திரன், டி. சுப்பிரமணியம், ஆர். மோசஸ் டி. ராசமாணிக்கம், எஸ். கிருஷ்ணமூர்த்தி ஜி., ஆறுமுகம், டி. கே. வெங்கடேசன் வி நாகராசன், கே, பக்தவத்சலு எம், துளசி, வாணியம்பாடி கே. சாம்பசிவம் வி பி. அன்பு, டி. வி. நடராசன், ஆம்பூர் ஏ நடராசன் தஞ்சை பெருந்தரங்குடி, எஸ். மாரிமுத்து கோவை காளியப்பராயன், பாளையம்புத்தூர் கே. எம். சடையப்பன், தெ. ஆ பண்ருட்டி, எஸ், இராமச்சந்திரன், சென்னை—94 டி. எம். கண்ணன், சென்னை—93 சாலிகிராமம் ஏ. எல். மணி, ஏ. எல், சுப்பையா நுங்கம்பாக்கம் கே. கருணாநிதி, இந்திரா நகர் எஸ். எம். முகைதீன், பெரம்பூர் எஸ். ஆறுமுகம். செம்பியம் எஸ் ராம்ஜோதி சென்னை-10 எம். இளங்கோ ஆகிய 35 பேர் ரூ 5 வீதம் 175—00

நரோம்பட்டை காந்திமதி செங்கை கெடுகம் பாக்கம் கோவிந்தன். குன்றத்தூர். கே. பி. கணபதி, பெரியபணிச்சேரி கே. பாலகிருஷ்ணன். குன்றத்தூர் கே. கணேசன், மக்கள் மறுமலர்ச்சி மன்றம், சென்னை—1 என். பத்மநாபன்; பி. முனுசாமி ஆர். துரைராஜ் என். சுந்தரம். என். மாணிக்கம், டி. ரவி. ஜி அசோகன். இராமையா, பெரியதம்பி ஆகிய 15 பேர் ரூ 5 வீதம் 75—00

திருப்பத்தூர் இராஜிபாளையம், ஆர். மாசிலாமணி, திருப்பத்தூர் டி. வி. மணி வாணியம்பாடி ஜே மனோஜிராவ்; திருப்பத்தூர் வி. கிருஷ்ணன். பி சோமசுந்தரம், ஆர். ரத்தினம் நவநீதகிருஷ்ணன், டி ஆர். கோவிந்தராஜ்; பி. எம். எம். நந்தகோபால், பி ஏ எம. முனிரத்தினம், அல்லாபக்ஸ், டி. ஆர். கோவிந்தராஜன். டி. ஏ புருஷோத்தமன், ராணி அம்மாள், எம். ஆர் ஆமத்பாஷா எம். பக்தவத்சலம், டி. வி. நாராயணசாமி, திருச்சி சி. அம்பிகாபுரம் செல்வி, வ கவிதா, வ லட்சுமி ஊரகம மு, செபபாலன், ஆர். நம்பியார். பி, கண்ணன். என், அறிவழகன். எஸ். ஜானகிராமன் வி. மணி. வி கருப்பையா மனச்சநல்லூர் ஆர். ராஜாமணி லால்குடி எம், நல்லசெல்வி. நெய்வேலி மதி. சிவசாமி. ச. ஆவுடையப்பன். தா. ஜோதி தியாகராசன் என். குப்புசாமி, வேலூர் எம். எஸ் நாதன், கோவை தொ. முத்தூர் என். சிரங்கன், வ. ஆ அண்ணாசாலை, வி. பீ. பாபு கே. பழனியப்பன் ஆகிய 36 பேர் ரூ 5 வீதம 180—00

மேல்விசாரம், கே. சி. கோவிந்தசாமி எஸ். எம் சகுதீன், டி. எஸ். அப்துல்சமது, பிரின்ஸ் ஓட்டல் எம். மாசிலாமணி கே, ஆர். ரஷித் போளூர் ஏ. மன்னார்சாமி. பெ. நடராசன், எஸ். க. நடேசன், இராமசாமி, மு. இளங்கோவன், மாயூரம திருமங்களம் எம. கலிபமூர்த்தி, தஞ்சை மாயவரம் எம. பன்னீர் செல்வம், தருமபுரி காவிரிபட்டினம் உண்ணாமலையம்மாள் ஆகிய 14 பேர் ரூ 5 வீதம. 70—00

மன்னிகைப்பேர் கே. எஸ் செலவராசு, திருவல்லிக்கேணி மு. நடராசன். களம்பூர் வி. ஜே. முகமது அலி. தோவாளை, கணேசன், கயர் டிரடர்ஸ் ஏ சுப்பையா—பி. எம். அப்துல் கரீம—ஏ. எம் ஷாஜகான், துள்ளுகுட்டி நாயக்கனூர். எஸ். சேவுக பாண்டியன் எஸ் பொன்ராசு. முனிசிபல் லாரி நிலையம் பி. சுந்தரம், மதுரை—1 ஏ. சின்னையன், புதுமாகாளிரோடு என். நாராயணசாமி, மதுரை சுப்பிரமணியன், அருப்புக்கோட்டை, எஸ் ரத்தினம், பெரியகுளம் இளந்தைக்குளம் பி. இராமையா எம். ராசேந்திரன், உத்தமபாளையம் பொன் பகவதி எம். அழகுதேவர், கே. கே. நகர் ஆளவந்தான், கந்தப்பட்டி டி, எஸ். ஜோதி நாதன் களம்பூர் வி. என். கண்ணப்பன், தேவேந்திரபுரம் இராமசாமி சேலம் டி. என். பொன்முடி அன்னம் அச்சகம் இலட்சுமி. திருப்பூர் ஆர். இராமமூர்த்தி, இராசாபாளையம் என் ஆனந்தராசா. புளியம்பதி ஏ. என். ஒ. சாகுல் அமீது. ஆரணி ஜே லோகநாதன். கே. முருகேசன், கெங்காதரன் வி சீனிவாசன், இறைபன்காடு ஏகாம்பரம், அரப்பாக்கம் சானகிராமன். இரா. சுப்பன், வேலூர் என். தங்கமணி தனக்கோட்டி அம்மாள் ஆகிய 34 பேர் ரூ 5 வீதம் 170—00

கான்பாளையம் எஸ் கே. துளசிதாசு, பழங்காநத்தம் எஸ். வி குருசாமி பி. சோலை, சமையநல்லூர் மு. காவலன், சென்ட்ரல் மார்க்கெட் கே சுப்பிரமணியன், அர்கிசுவர்காலனி எம். வேலு, பல்லாவரம் ஜி. லோகநாதன் எருமையூர் ஆர், பொன்னுவேல். பி வரதன், படப்பை ராமமணி, நடுவீரபட்டு கண்டிகை சி. நடராசன். குடியேற்றம் சுப்பிரமணியன், படப்பை, பலராமன், எம். ஏ. மாரி, மேல் படப்பை ஆர் மோகன், படப்பை வி. எம். பச்சைபப்பன் ஆகிய 16 பேர் ரூ 5 வீதம் 80—00

பெங்களூர் எச்.எம்.டி. பி. ஆர். முனுசாமி தொழிற்சாலை நகர் கே. எஸ். இராமன், குணை ஆர். பால வெங்கட்ராமன், சேலம் தே. சந்திரன். ஆயிபாளையம ஏ வி. திருமூர்த்தி திண்டுக்கல் ஏ. சேக் முகமது, மதுரை ரோடு கே. ஏ. அப்துல் காதர் திண்டுக்கல் ஆர். தங்கவேல் பவானி கே. பி வரதராஜ் பி. சி- மணி சென்னை—13 க. மணி, பா. துளசிங்கம் சென்னை—94 தே. கோதண்டராமன், சூளைமேடு செ. ஆ. மூர்த்தி ஏ எம். மீரான். அரும்பாக்கம் ஆர். செல்லதுரை இரா. சண்முகம், சென்னை இண்டர்நேஷனல் கம்பிட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட், கலயகம் ஜி சம்பத் இந்தியா பிஸ்டன்ஸ் லிமிடெட். ஜே ஜெயராஜ், சென்ன தட்சிணாமூர்த்தி. — சென்னை பால சுப்பிரமணியம. சென்னை—23 தே. ரெ ஐ.டி. சுந்தர்ராஜ். என் முத்து பி. தர்மலிங்கம ஏ. இராமனுசம். அப்துல்ரசாக் சென்னை—10 ஏ. ஜி எஸ். கொள்கைவேந்தன். கீழ்ப்பாக்கம காடன் காலனி டி. ஆர் கோவிந்தன் அபன்புரம க. சந்திரன், சென்னை—29 திருமதி. சு. நேசமணி அசோக்நகர் திருமதி வனசா, சென்னை—13 திருமதி அஞ்சனாதேவி, சூளை கே கே. கண்ணன், சென்னை—1 ஆர். மனோகரன். கரு எஸ். மணி, மதுரை நா. பொயசாமி சேலம் ஆர். பெரியசாமி, சாலிக்கிராமம் பி பழனிச்சாமி, ஆகிய 35 பேர் ரூ 5 வீதம் 175—00

வி. ஆர் புரம முகவை தைபலநம். ஒட்டேரி ஆ. அண்ணாத்துரை; வீர அய்பாக்கண்ணு ஏ. சுப்புராமன். வீர சின்னசாமி மதுரை ரெ. அப்யாசாமி, செல்லூர் எஸ். பாடலிங்கம், இஸ்மாயில்புரம் எம. சையது சுலைமான், சென்னை எம் சரஸ்வதி, அம்பத்தூர் பி செயந்திராஜ் சுடர்தீபம் கலைஞர் நற்பணி மன்றம் அ. இராமன்-நெல்லிஆர் பி லிங்கம் சென்னை கே. எஸ் முருகேசன்பிள்ளை, இராசாமணி. எச் சலாவுதீன் ஆகிய 15 பேர். ரூ 5 வீதம் 75—00

விழுப்புரம் பி கனகசபை, கோலியனூர் எம். புண்ணியமூர்த்தி விழுப்புரம் ஆர். பால்ராஜ் ப. மருதூர் வி. ஜெயராமன், விழுப்புரம் பி. சங்கரன், கிரிமேடு ஆ. செயராமன். விழுப்புரம் எம். பழனி அசோகாபுரி வி. சங்கரன், மந்தகரை ஜே சுசீலா எஸ். சானகிராமன், விழுப்புரம் பி. ஆறுமுகம் விழுப்புரம் டி. தணிகாசலம், எஸ். இராமலிங்கம், எஸ். மணி, வி. பொன்னுசாமி, எஸ். பி. துரைராஜ். முண்டிபம்பாக்கம் ஆர். பாலசந்திரன். உருளையன்பேட்டை பி என். சந்திரா. பி. என். மணி. எஸ் குப்புசாமி, ஆற்காடு அ கோ. பாண்டுரங்கன், புதுவை சதா தமிழ்ச்செல்வன். முத்தையா முதலியார்பேட்டை ஏ. மணி,

(தொடர்ச்சி 10-ம் பக்கம்)

எம். ஜி. ஆர் தமிழ் வளர்ப்பாரா?

(இரா. நரேந்திரகுமார்)!

ஈடு இணையற்று மிளிரும் தென்னகத்தின் இயக்கங்களாம், தாய்க் கழகம் திராவிட கழகமும், சேய்க் கழகமாம் திராவிடமுன்னேற்றக் கழகமும் நடத்திய இந்தி எதிர்ப்பு முனைப்பினைக் கண்ட எம். ஜி. ஆர். சில நாட்களாக தமிழ் தமிழ் என்று முழங்குகிறார். இந்தியைத் தடுக்கப் போவதாகக் கூறி— இயலாதவர்களை அழைத்து தென்னக முதல்வர்களின் மாநாட்டினையும் கூட்டியிருக்கிறார். We ase for Hindi எனப் பேசிய மனோகரனை 'இரத்தத்தின் ரத்தமாகக் கொண்ட' புரட்சியாரிடமிருந்து உண்மையான தமிழுணர்ச்சியை எதிர் நோக்குவது தாகத்தைத் தணித்திடக் கானலை நாடுவதற்கு ஒப்பாகும்

அண்மையில் மதுரையில் நடைபெற்ற தமிழாசிரியர் கழக மாநாட்டில் கலந்து கொண்ட எம் ஜி ஆர், தமிழாசிரியர்களின் நிலைகண்டு துடித்துவிட்டாராம்.

முந்தைய ஆட்சியினர் தமிழாசிரியர்கள் நலனைக் கருத்தில்கொள்ள மறந்தனரே என்று அழுது புலம்பினாராம். தமிழாசிரியர் வாழ்ந்தால் தானே தமிழ் வாழும் என்றும், இலக்கியங்களைப் படைப்பவர்கள் இன்னல் அடையலாமா? என்றும், வினாக்குறி எழுப்பியிருக்கிறார்.

தமிழாசிரியர்கள் வாழ்ந்தால்தான் தமிழ் வாழும் என்பதைமறுக்கவில்லை. இலக்கியம்படைக்கும் செம்மல்கள் இன்னல் அடையவே கூடாது. ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் முந்தைய ஆட்சியினரைப் பற்றி குற்றஞ்சாட்டியிருக்கிறாரே அதை யார் ஏற்பது? எப்படி ஏற்பதற்கியலும்? தமிழர்களின் வாழ்விற்கும் வளத்திற்கும் இராப் பகலாய் உழைத்தது தி. மு. கழக ஆட்சி. தமிழ் வளர்ச்சிக்கும், மலர்ச்சிக்கும் தன்னையே தந்த தானைத்தலைவர் கலைஞர்!

'பண்டிதர்வருகிறார்' என்ற கேலிப்பேச்சையே கேட்டுத் துடித்த தமிழாசிரியர்களை தலைநிமிர்ந்து நடக்கச் செய்த ஆட்சி யாராட்சி? கழக ஆட்சியன்றோ? தமிழாசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாகவேண்டும் என்ற வேண்டுகோளை ஏற்ற ஆட்சி யார் ஆட்சி?

கழக ஆட்சியும், கலைஞரும் தமிழாசிரியர்கட்குச் செலுத்திய காணிக்கைகளை அவர்கள் வெளியிட்டுள்ள மலரைக் கண்டாவது புரட்சியார் அறிந்திட வேண்டும்

புனிதரின் ஓராண்டு ஆட்சியில் தமிழாசிரியர்களுக்குச் செய்த சாதனைகள் என்ன? அரியணைக்கட்டிலில் அடியெடுத்து வைத்த அடுத்த நிமிடமே முகவை மாவட்டத்தில் மட்டும் பதின்மூன்று தமிழாசிரியர்களை பழிவாங்கிப் பதவிபிறக்கம் செய்த ஆட்சி யாராட்சி?

பழிவாங்கப் பட்டோருக்காகப் போராடியவர்கள் யார்? தமிழினத்தலைவர் கலைஞரும் கழகச் சட்டமன்ற உறுப்பினர் சுப்புவும் அல்லவா? இருவரும் சேர்ந்து சட்டமன்றத்தில் சாடிய பிறகே அன்றோ அந்தச் சட்டத்தை மாற்றிடத் துணிந்தது எம். ஜி. ஆர். ஆட்சி!

விடுதலை! விடுதலை! விடுதலை

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வரவேற்றுப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அப்படிச் சொல்லுவதற்கான துணிவோ தகுதியோ அவர்களுக்கு ஏது?

நடிகை லதா, உண்மை வாழ்க்கையில் கூட அல்ல — திரைப்படத்தில் பக்திக் கதைகளில் வேடமேற்று நடப்பதும் தங்கள் கட்சிக் கொள்கைக்கு முரணானது என்று கருதி 'புரட்சி'யாரின் ஒப்புதலோடு அவரை கட்சியிலிருந்து விடுவிக்க முன்வந்த அமைப்புச் செயலாளர் 'ரசிகர்'களிடையே எழுந்துள்ள சந்தேகங்களையும் போக்க வேண்டும்.

சினிமாவில் நடிப்பதற்கே இவ்வளவு கெடுபிடி என்றால் உண்மை வாழ்க்கையிலேயே அசல் பக்தர்களாக — பக்தகோடிகளாகக் கட்சியிலிருக்கும் கட்சித் தொண்டர்களின் — அதாவது ரசிகர்களின் கதி என்ன ஆவது?

திருப்பதிக்குச் சென்று முடிக் காணிக்கை செலுத்திவிட்டு வந்த எம். பி. யான மாயத்தேவரைக் கட்சியிலிருந்து விடுவிக்கவில்லையே ஏன்? கட்சியின் தலைவரே மாயத்தேவரின் மொட்டைத் தலையைத் தொட்டுக் கும்பிட்டு அல்லவா புண்ணியம் தேடிக் கொண்டார்!

மாயத்தேவருக்கு ஒரு நீதி, நடிகை லதாவுக்கு ஒரு நீதியா என்று கொதித்துக் கேட்கிறார் ஒரு ரசிகர்.

பாண்டிச்சேரி மந்திரி இராமச்சந்திரன் குடும்பத்தோடு திருப்பதி சென்று தரிசனம் செய்து வந்த செய்தியைப் பத்திரிகைகளெல்லாம் படத்துடன் வெளியிட்டனவே அப்போதே அவரை விடுவித்திருந்தால், இப்போது இராதாபாய் விவகாரம் வந்திருக்காது அல்லவா?

இதுவும் ஓர் ரசிகரின் உள்ளத்தில் எழுந்துள்ள கேள்விதான்!

உண்மை வாழ்க்கையிலேயே ஒழுக்கக் கேடாக நடந்துகொண்டதாக மந்திரி இராமச்சந்திரன் மீது புகார் கூறப்பட்டும், அவரை விடுவிக்கத் துணியாதவர்கள், திருப்பதிக்குப்போய் சாமி கும்பிட்டதற்காகவா விடுவித்து விடப்போகிறார்கள்?

சென்ற வாரம் கூடத்தான் பாண்டிச்சேரியில் இரண்டு மந்திரிகளும் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து அம்மன் கோவில் தேரை வடம்பிடித்து இழுத்திருக்கிறார்கள்!

இவர்களையெல்லாம் 'விடுவித்து' விட முடியுமா?

லதா விவகாரம் வேறு; மந்திரிகள் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் விவகாரம் வேறு.

அ.தி.மு.க.வில் உள்ள நடிகைக்குத்தான் இந்தக் கட்டுப்பாடா, ஆண் நடிகர்களுக்கு இல்லையா?

இப்படியும் ஒரு சந்தேகத்தைக் கிளப்புகிறார் இன்னொரு ரசிகர்!

மந்திரிப் பதவி பெற்றுவிட்ட பழம்பெரும் நடிகர் முதல் பச்சைகுத்திக் கொண்டு புதிதாகக் கட்சியில் சேர்ந்த நடிகர் வரை எந்த ஆண் நடிகரும் பக்திப்படத்தில் நடித்ததில்லையா — இனி நடிக்கவேமாட்டார்களா?

ஏன், எங்கள் புரட்சித் தலைவரே முன்பு முருகன் வேடமும், பரமசிவன் வேடமும் போட்டு நடித்தவர்தானே என்கிறார் மற்றொரு ரசிகர்!

அப்படிப் பார்க்கப்போனால் கட்சியில் எத்தனை பேர் மிஞ்சுவார்கள்?

முதலில் கட்சியின் தலைவரையே அல்லவா 'விடுவித்து' அறிக்கை விட்டிருக்க வேண்டும்!

இரவோடு இரவாக யாருக்கும் தெரியாமல் சென்று காஞ்சி சங்கராச்சாரியார் காலில் விழுந்து, அவரிடம் ஆசீர்வாதமும் 'ருத்திராட்ச திட்சை'யும் பெற்றுவந்தாரே கட்சியின் 'புரட்சித் தலைவர்', இதற்குஎன்ன தண்டனை?

நெற்றியிலே விபூதிப்பூச்சும் குங்குமப் பொட்டும் பளிச்சிட படம் எடுத்து அதை சுவரொட்டியிலும் அச்சிட்டு தேர்தலுக்கு ஓட்டு கேட்ட அ.தி.மு.க. வேட்பாளர்கள் பல உண்டே — அவர்களையெல்லாம் விடுவித்து விட முடியுமா?

அரசாங்க விழாக்களைக்கூட நாள் பார்த்து, நேரம் பார்த்து நடத்தச் சொல்லும் மந்திரிமார்களை எப்படி 'விடுவிப்பது'? யார் விடுவிப்பது?

மந்திரிசபை பதவி ஏற்ற நிகழ்ச்சியே எம். ஜி. ஆரின் ஆஸ்தான சோதிடர் கணித்துச் சொன்ன நாளில், நட்சத்திரத்தில், லக்னத்தில் தானே நடந்தது!

இப்படியெல்லாம் கிளறிக்கொண்டே போனால், 'இது அண்ணாயிசத்துக்கேவிரோதமானது' என்று அடித்துச் சொல்லி விடுவார் புரட்சித்தலைவர்! அப்புறம் பெட்டிப்பாம்பு போல அடங்கிவிடுவார் அமைப்புச் செயலாளர்.

'குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை' என்று சொல்லவில்லையா அறிஞர் அண்ணா... இல்லை இல்லை 'அமரர் அண்ணா'!

அமரர் அண்ணாவின் இந்த அறிவுரையை மறந்தவர்கள்தான எதற்கெடுத்தாலும் குற்றஞ்சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

ஏதோ, லதா விவகாரத்தில் இப்படி ஒரு அறிக்கை விட்டால், எல்லோருடைய விவகாரத்தையும் சந்திக்கு இழுப்பதா? கூடாது கூடாது.

தலைவர் எவ்வழி அவ்வழி நடப்பதே ரசிகர் தம் கடமை.

வாழ்க அண்ணாயிசம்!

அமரர் அண்ணா நாமம் வாழ்க!!

சட்டம் ஒழுங்க சந்தி சிரிக்கிறது..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

எம். ஜி. ஆர்: ஆட்சியில் தூக்கில் இடப்பட்டிருக்கிறார். ஓர் இளைஞர் இந்த வேதனை மிக்க செய்தி பத்திரிகையில் வெளிவந்ததைப் பார்த்துக் கண் கலங்காதோர் இதயமுள்ளவர்களாக இருக்க முடியாது! கிருஷ்ண செட்டி என்ற முப்பது வயதுள்ள நக்சலைட் இளைஞர் கோவை மத்திய சிறையில் சென்ற ஜூலைத் திங்கள் இருபத்தைந்தாம் நாள் பரம ரகசியமாக தூக்கிலிடப்பட்டிருக்கிறார். திட்டமிட்டு, சதி செய்து பரமரகசியமாக எம். ஜி. ஆரின் புனித அரசு இந்த அரசியல் கைதியைக் கொன்றிருக்கிறது என்று டெக்கான் ஹெரால்டு' என்ற ஏடு திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளது தமிழகத்தில் சிறையில் தூக்கிலிடப்பட்ட முதல் அரசியல் கைதி இவர்தான் அரசியல் கைதியான கிருஷ்ண செட்டியைத் தமிழக அரசு சட்ட ரீதியாக எனக்கூறி மிகவும் இரகசியமாகத் திட்டமிட்டுச் சதி செய்து கொன்றுள்ளது என்கிறார்கள் — மக்கள்.

கிருஷ்ணசெட்டியைக் காப்பாற்ற குடியரசுத் தலைவருக்கு தமிழக அரசின் வாயிலாக கருணை மனு ஒன்று அனுப்பப்பட்டது. கருணையேவடிவான' முதல்வர் எம் ஜி. ஆர். அதைப் பரிந்துரை செய்ய மறுத்துவிட்டாராம். அதோடு மட்டுமல்ல அரசின் சார்பில் உள்துறை செயலாளர் அரசியல் ரீதியாக கருணைக் காட்டத் தேவையில்லை என்று எழுதி விட்டதாகச் சொல்லப்படுகிறது எனவே மத்திய அரசும் கருணை மனுவை நிராகரித்துவிட்டது. கடைசியாக கிருஷ்ண செட்டி தூக்கில் இடப்பட்டு விட்டார்.

கழக ஆட்சியின் போது கலைஞர் முதல்வராக இருந்த நேரம், நக்சலைட் தோழர் கலியபெருமாள் என்பவர் தூக்கிலிடப்பட வேண்டும் என்று வழக்கு மன்றம் தீர்ப்பளித்திருந்த போதும்- அந்தத் தோழரை தூக்குத் தண்டனையிலிருந்து காப்பாற்றி விட்டார். இந்த கருணை நிறைந்த முடிவினை தமிழக மக்கள் எண்ணி பாராட்டினார்கள் கலைஞரை.

அறிஞர் அண்ணாவின் அடிச்சுவட்டை அப்படியே பின்பற்றும் கலைஞரின் கருணை உள்ளம் எங்கே? அண்ணாவின் பெயரைச் சொல்லி ஆட்சி நடத்தும் நடிகரின் கல்நெஞ்சம் எங்கே? என்று தமிழக மக்கள் சிந்தித்துப் பார்க்கிறார்கள்; செய்வதறியாது திகைத்துப் போகிறார்கள்

M.K. TRADERS MADRAS-600024 MK

தவணை முறைத் திட்டத்தில் புதிய சகாப்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் எங்களது சுலபத் தவணை முறைத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயனடைவீர்!

H.O. 41, ரங்கராஜபுரம் ரோடு, சென்னை-24
SHOW ROOM 50, ஏரிக்கரை ரோடு, சென்னை-33
B. O. 104-A ராமகிருஷ்ணா மடம்சாலை, சென்னை-28
திறமையுள்ள ஆண் -பெண் கேன்வாசர்கள் தேவை'

"நம் நாடு"

முப்பெரும் விழா மலர்!

'நம்நாடு' முப்பெரும் விழா மலர் மிகச்சிறந்த முறையில் உருவாகிறது!

கழகத் தலைவர்கள், முன்னணி எழுத்தாளர்கள் தோழமைக் கட்சித் தலைவர்கள் மட்டுமின்றி வெளி மாநிலத் தலைவர்களும் மலருக்கென எழுதுகிறார்கள்.

பெரியார், அண்ணா எழிலுருவம் தாங்கி மூவண்ண முகப்புடன் கருத்துக் கருவூலமாக மலர் அமையவிருக்கிறது.

கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் படித்துப் பாதுகாக்க வேண்டிய இந்த மலரின் விலை

இரண்டே ரூபாய்தான்!

மலர் வேண்டுவோர் உள்ளூர் விற்பனையாளரிடம் பெயரைப் பதிவு செய்து கொள்க.

விற்பனையாளர்கள் தங்கள் தேவைக்கு உடன் எழுதுக!

--நிர்வாகி,
'நம்நாடு'.

உயிர் வாழும் இரண்டு உலக அதிசயங்கள்

கேள்வி:— மங்கையை ஒரு புறத்திலும் மதுவை ஒரு புறத்திலும் வைத்தால் நின் மனம் நாடுவது எது?

பதில்:— எனக்கு இரண்டு கரங்கள் இருக்கின்றன, ஒரே மனம் சம அளவில் இரண்டு பங்காகவும் பிரியும்!

—இவ்வாறு பதில் அளித்திருப்பவர் காலம் சென்ற 'உமர்கயாம்' என நினைத்து விடாதீர்கள்; அவருடைய 'தத்துப்புத்திரன் எனத்தனக்குத் தானே முத்திரை குத்திக் கொண்டு இரவினில் ஆட்டமும் பகலினில் தூக்கமும்' போடும் 'கோப்பையிலே குடியிருக்கும்' நம்முடைய 'ஆஸ்தானக் கவி' தான்

('கண்ணதாசன்' — மாத இதழ் பிப்ரவரி '78— ஐயம் அகற்றும் பகுதி)

மதுவிலக்கை எதிர்த்துக் கடுமையாகவும், இடைவிடாதும் ஆவேசமாகவும் நம்முடைய 'ஆஸ்தானக் கவி' போரிடுவதைப் போல், தமிழ்நாட்டில் என்ன — 'அகில பாரதத்திலேயே ஒரு ஆசாமியைக் காண முடியாது

இந்தக் கவி கதராடை தரித்து கடந்த நாட்களில் காங்கிரசுக் கட்சிக் கூட்டங்களில் சண்டப்பிரசண்டம் செய்து கொண்டிருந்தபோதே ஒருவர் கேட்டார்:

"காங்கிரசுக்காரர் என்று கூறிக் கொண்டு குடிப்பழக்கத்தையும் விடாது இருக்கிறீர்களே... இது சரியா?" என்று

இம்மாதிரியான கேள்விக் கணைகளுக்கெல்லாம் என்றுமே அஞ்சாத — 'கண்ணாடி விளிம்பில் கவலையை மறக்கும் கவி 'பட்' டென்று பதில் சொன்னார்:

"குடிக்கின்றவனெல்லாம் காங்கிரசுக் கட்சியில் இருக்கக் கூடாது. என்றால் நூற்றுக்குத் தொண்ணூறு காங்கிரசுக்காரர்கள் கட்சியை விட்டு மூட்டை முடிச்சுகளுடன் வெளியேற வேண்டியதுதான் —

பகவத் கீதைக்குப் புதிய உரை எழுதப் புறப்பட்டிருக்கும் இந்தக் கண்ணன் அவதாரக் கவி, அந்த கிருஷ்ண பரமாத்மா'வின் வாக்குப்படி 'தன்னைப்போல் பிறரையும் நினைத்துக் கொண்டதாலேயே சகலரும் குடிகாரர்கள் என்று சகட்டுமேனிக்கு அன்றே உளறினர்

★★★★★★★ ★★★★

பழனி சித்தார்த்தன்

★★★ ★★★★★★★★

இன்னொரு வேடிக்கை என்ன வென்றால் —

'மது அரக்கனை ஒழித்தே தீருவேன் என்று தொடை தட்டி முண்டா உலுக்கும் எம். ஜி. ஆர். தன்னுடைய 'ஆஸ்தானத்திற்கு சரியான நபராகப் பார்த்து கவியாக நியமித்திருப்பதுதான்! —

'இரண்டு மனம் வேண்டும்...' என இறைவனிடம் கேட்கும் கவிக்கு, ஏற்கனவே இரண்டு கரங்கள் இருப்பதால் ஒரு கரத்தில் மது ததும்பும் கோப்பையைப் பற்றிக் கொண்டே, இன்னொரு கரத்தால்... 'குடி கெடுக்கும் குடி' போன்ற தலைப்புக்களில் பாட்டெழுதிக் குவிக்கலாம்... 'பீடிகளுக்கும் ஊதுபத்திகளுக்கும்...' பேதம் தெரியாத. 'யாரை எங்கே வைப்பதென்று...' அறியாத-ஒரு முதலமைச்சரின் கீழ் நிழல் திரைகளில் கோமாளிச் சேட்டைகள் செய்பவர்கள் துணை மந்திரிகளாகலாம்; அரசாங்கக் கொள்கைக்கு முழுக்க முழுக்க எதிரானவர்கள் 'ஆஸ்தானக் கவிகள்' ஆகலாம்;

பக்கத்து சரப பிரதேசங்களிலிருந்து பீப்பாய் பீப்பாயாக சாராயம் கடத்தி வந்து சென்னை முழுக்க 'சப்ளை' செய்யும் 'மாவீரர்'கள் சூழ பவனி வரும் ஒருவரின் மங்கிய கண்களுக்கு 'ஆஸ்தானக் கவியாக' நியமிக்க வேறு யார் கிடைக்கப் போகிறார்கள்?

—இந்த 'இழவெல்லாம்' போய்த் தொலையட்டும்! ஆனால்—

சத்தியம் குறித்து 'ஆஸ்தானக் கவி' அவ்வப்போது 'திருவாய் மலர்ந்தருளுவது' தான் சகிக்கக் கூடியதாக இல்லை!

'சில நேரங்களில் சத்தியம் கூட பொய்யைக் கண்டு அஞ்சுவது ஏன்?

—இப்படிக் கேள்வி கேட்கிறார் ஒருவர்

கூளப்பநாயக்கன் காதல் — விறலிவிடு தூது — காமசூத்திரம் — வாத்ஸாயனரின் நோக்கோக விளக்கம் — ஆண் - பெண்களின் சாமுத்ரிகா இலட்சணங்கள் — போன்றவற்றை 'பச்சையாகவும் கொச்சையாகவும் விவரித்து எழுதி பணம் புரட்டும் ஆஸ்தானக் கவி 'சத்திய விளக்கம் அளிக்கவும் தவறவில்லை: அது இதுதான் — காமராசர் கருணாநிதியைக் கண்டு அஞ்சியதைச் சொல்கிறீர்களா? இந்திரா காந்தி, ராஜ் நாராயணனிடம் தோற்றதைச் சொல்கிறீர்களா? 'உண்மை வீட்டை விட்டுக் கிளம்புமுன் பொய் உலகை வலம் வந்துவிடும் — என்பது தானே ஆங்கிலப் பழமொழி காலமுந்த நியாயங்கள் கூட ரென்று பிடிக்கும் நெருப்பைக் கண்டு பயப்படாமல் இருக்க முடியுமா?

ஆஸ்தானக் கவி கடைப்பிடித்து வரும் சத்தியம் என்னவென்று ஊருக்கே தெரியும்!

ஆகவே ...

சத்தியத்தைக் கண்டறியவும் அதற்கொப்ப வாழவும் மகாத்மா காந்தி எப்படியெல்லாம் தனக்குத்தானாகவே போரிட்டுக் கொண்டார் என்பதை அவருடைய 'சுயசரிதை' நமக்கு உணர்த்துகிறது

தலைகுனிந்து அந்த காந்தியின் சத்தியத்தை இந்தக் கவியின் 'சத்தியத்தோடு ஒப்பிட்டுப் பார்த்துவிடாதீர்கள். 'எது இன்பமளிக்கிறதோ அதுவே நீதி' என்ற அமெரிக்க நரிக்குறவர்களான ஹிப்பிகளின் சித்தாந்தத்தைப் போல், எது இலாபம் தருகிறதோ அதுவே சத்தியம்' என்பதுதான் ஆஸ்தான கவியின் சித்தாந்தம்.

இல்லாமலா—

"காமராசர், கருணாநிதியைக் கண்டு அஞ்சினார்..." எனக் கூசாது பொய்யுரைப்பார்? தனி ஒருவரின் சர்வாதிகாரம் ஒரு கருத்த மேகமென கவிந்து இந்தியா முழுவதையும் இருளில் ஆழ்த்தியபோது கலைஞர் ஒருவர் 'மின்னலென வெட்டி மிளிர்ந்து அவ்வப்போது ஒளிபாய்ச்சியதைக் கண்டு ஆனந்தக் கண்ணீர்' அல்லவா வடித்தார் காமராசர்! நெருக்கடி நிலையை எதிர்த்த காமராசரைக் கைது செய் என டெல்லி ஏகாதிபத்தியம் விடுத்த ஆணையைத் தூக்கி எறிந்து 'ஒரு தமிழனை இன்னொரு தமிழன் கைது செய்வதா?' என்று கனல் தெறிக்க முழங்கிய கலைஞர்தானே காமராசரின் இறுதி நாட்களில் அவருக்கு ஆறுதல் அளிப்பவராக இருந்தார்

'நேருவின் மகள் மீண்டும் வர வேண்டும் — வர வேண்டும்' என்று 'சப்புக்' கொட்டிக் கொண்டிருக்கும் இந்த 'ஆஸ்தானக் கவி' இந்திரா காந்தியின் தோல்வியை 'சத்தியத்தின் அச்சம்' என இப்போது வர்ணிக்கிறார்

ஆனால் அப்போது—

இந்தியா முழுக்க இந்திரா கட்சியினர் தோல்வியைத் தழுவிய உடனேயே— 'எல்லா காங்கிரசார்களும் உடனே ஜனதா கட்சியில் சேர்ந்து விடுங்கள்...' என்று தலையங்கம் எழுதி உபதேசம் அருளினார்!

நிறம் மாறும் பச்சோந்தியைவிட — வேகமாக் குணமும் கொண்ட கொள்கையும் மாறும் இந்தக் கவியையும்'

இவரை 'ஆஸ்தானக் கவி'யாக நியமித்த மனிதரையும் — உலக அதிசயங்களின் பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம்!

(8—ம் பக்கத் தொடர்ச்சி)

புதுவை வெ. செல்வராசு, இபாக துருகம் எம். இராமலிங்கம். கடலூர் எம். தாஸ். சேத்தாரப்பட்டு திருமதி, செயம் சுந்தரராசலு கே. கே. புதூர் பி எம். ஜோசப். கீழ்க்கொடுங்காலூர் எஸ். ஏ. கணேசன் வந்தவாசி விஜயலட்சுமி வேணு கோபால் கீழ்கொடுங்காலூர் டாக்டர் ஆர் பச்சையப்பன் சின்னசமுத்திரம் ராதாகோவிந்தன், திருவத்திபுரம் பி. சோமசுந்தரம், கே. தட்சிணாமூர்த்தி பல்லவாக்கம் பி சந்திரகாந்தன் திருவத்திபுரம் ந. குருநாதன். சோ. திருநாவுக்கரசு பி சந்திரகாந்தன், திருவத்திபுரம் ந. குருநாதன், சோ. திருநாவுக்கரசு ஆகிய 37 பேர் ரூ 5 வீதம் 185—00

திருவத்திபுரம் எம். கோவிந்தராசு, சீனிவாசன், வெற்றிவேலு — பாப்பாத்தியம்மாள், என். கோவிந்தராசு, எரையூர் சிவா—சி. தாசகாந்தன், வாணியம்பாடி ஏ. நடராசன், பிச்சனூர் பி. கே. வி, ஞானவேலு, தட்டக்கல் தா. கோவிந்தசாமி, சின்னசமுத்திரம் பி. கே வி. ஞானவேலு. திருப்பத்தூர் டி. எஸ் சின்னதம்பி, திருப்பத்தூர் ஜி சுந்தரராசன், புதூர் பி. ஏ கேசவப்பிள்ளை. புதுப்பேட்டை பிரேமா ஆகிய 13 பேர் 5 வீதம் 65—00

புதுப்பேட்டை சேக் தாவூத், திருப்பத்தூர் ஆர். வி. தண்டபாணி, எம். ராமசாமி சரோசா, கென்னடிநகர் நாகையன். வ. ஆ. வி. கே. குப்தா, சோமநாயக்கன்பட்டி குப்புசாமி, புதுப்பேட்டை ஆர். பால்ராசு, பட்டுக்கோட்டை கே. இராமு. மைலம்பாடி கே. எம் இராமசாமி, ஊரகம் எம். அழகப்பன், தேவபாண்டலம் ஏ. குணசேகரன். மேல்செங்கம் எம். ஆர். சுப்பிரமணியம். ஜி. வி. பதி குன்றத்தூர் காளியண்ணன், கே. என். செயசந்திரன், காளிங்கராயன்பாளையம் ஜெயமணி அய்யம்பாளையம் ஏ. கே. முனியப்பன், சாலிக்கிராமம் எம். இறைவன், மதுரை சித்தாந்தம் தல்லாகுளம் எம். பெருமாள். வரகனேரி எம். அசோக்ராஜ். தூத்துக்குடி வி. சி. கதிரேசன், கோழிப்பாளையம் எம். நல்லமுத்து, மதுரை ஞான பீட்டர் தாமஸ், ஆழ்வார்புரம் கே. பாலு. தல்லாகுளம் ஆண்டியப்பன், மதுரை கே. சக்கரை முகமது. கீழ் சித்திரை வீதி என்; எல். சம்பத் வாணியம்பாடி எஸ். எஸ். சுப்பிரமணி; கே. ஆர். ரகுநாதன், கே. எம். குமரேசன். எம். எஸ். இக்பால், டி. என். ஜெகன்னாதன். சின்னகண்ணு. எம். சுப்பராயன். ஆகிய 36 பேர் ரூ 5 வீதம் 180—00

திருப்பத்தூர் எம். கோவிந்தசாமி. திருச்சி எம். சண்முகம், சென்னை—1 எஸ். என். செயராமன் சென்னை—7 ஏ. கே. எம். மணி. சென்னை. 1 சுடர்தீபம் கலைஞர் நற்பணி மன்றம் ஜி. இராசு எஸ். கணேசன். கே. முத்துச்சாமி, எம்; லோகநாதன். என் வசந்தகுமார். குப்பன், யாகூப், ஈ சுப்புக்குட்டி. பாலசுப்பிரமணியன், பி. துரை ஆகிய 14 பேர் ரூ. 5 வீதம் 70—00

ஆகமொத்தம் ரூ 72107 03

விரைவில் தொடங்குகிறது 'நம்நாடு' இதழில் 'ஊழ் வினை' தென்னரசு எழுதும் மற்றொரு உண்மைக் கதை

தொலைபேசி எண்: கடை: 33213 இல்லம் 31922

நாம் நாடுவோர் தவறாமல் நாடுவது

தமிழக எண்ணெய்ப் பலகாரம்

தயாரிப்பு: விற்பனை நிலையம்

92, திருப்பரங்குன்றம் சாலை மதுரை

தனிச்சிறப்பு: சிலேபி, தெக்கத்தி மிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முறுக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்

உரிமையாளர் பே. தேவசகாயம்

கிளைகள்: 261. மேலமாசி வீதி, 70. சுவாமி சன்னதி 12. அழகர்கோவில் சாலை, 72 CL வன்ஹால்ரோடு, மதுரை.

புனிதராஜ்யம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தப்பு!... இந்தப் பெண்ணுக்கு இன்னம் கல்யாணம் ஆகலே...

வேலன்; அப்பவும் என்னுங்க? கல்யாணம் ஆகாத பெண்ணைத்தான் கல்யாணம் பண்ணிக்குவாங்க! கல்யாணம் ஆன பெண்ணையா கல்யாணம் பண்ணிக்குவாங்க!...

(சொக்கி, சிரிக்கிருள். சுந்தரத்திற்கும் சிரிப்பை அடக்க முடியவில்லை)

சுந்தரம்: இவுங்க ஒரு அனுதை மாதிரி!...

வேலன்: நீங்க அனுதை ரட்சகனுச்சே!

சுந்தரம்; வேலா! சொல்றதைக் கேளு! இதோட தாத்தாவை ஊர்ல சில ரௌடிகள் கூடி கொலை பண்ணிட்டாங்க!... அது சம்பந்தமா, போலீஸ் அதிகாரிகளுக்குப் புகார் கொடுக்க இந்தப் பெண்ணை அழைச்சிட்டு வந்திருக்கேன்

வேலன்: நீங்களே போலீஸ் அதிகாரி; அதுவும் சூப்பிரண்ட்டு அய்யா நீங்க! நீங்களே அந்த ரௌடிகளை அரஸ்ட் பண்ணி நடவடிக்கை எடுக்க வேண்டியதுதானுங்களே

சுந்தரம்: வேலா! நான் இப்போது வாயிருந்தும் பேச முடியாதவன்! இதற்கு மேல் என்னை எதுவும் கேட்காதே! நீ இதுவரை எனக்குத் துணையாக இருந்தமைக்கு நன்றி! முறைப்படி நீ, ஆபீசுக்குப்போய் உன்னை நான் அனுப்பி விட்ட விபரத்தைக் கூறிவிடு. என் ராஜினுமா கடிதம் அநேகமாக இன்றைக்கே ஏற்றுக்கொள்ளப் படுமென்று நம்புகிறேன் நாளைக்கு, நான் இங்கிருக்க மாட்டேன்! கண்டிப்பாகப் பேசுகிறேன் என்று வருத்தப் படாதே தயவுசெய்து நீ உடனே போய்விடு!

வேலன்: (அழுதவாறு) வணக்கம் சார்! என்னை, ஒரு தம்பி மாதிரி அன்பா நடத்துனீங்க இப்ப இப்படி ஒரு நிலைமை வந்தாச்சு! நான் வர்றேன். அம்மா வர்றேன்ம்மா!... (வணங்கிவிட்டுக் கலங்கியபடி செல்கிருன்)

சுந்தரம்: (கண்களைத் துடைத்துக் கொண்டு, சொக்கியைப் பார்த்து) வேலன் மிகவும் நல்லவன்! ம்! நல்லவைகளுக்குத் தான் இது காலமில்லையே!... என்னை விட்டால் அவனுக்கு எத்தனையோ அதிகாரிகனிடம் வேலை! இருந்தாலும் அவன் நன்றி உணர்ச்சியைப் பார்த்தாயா?

சொக்கி; நன்றியுள்ளவர்களைப் பார்க்கிறதே குதிரைக்கொம்பாக இருக்கிற இந்தக் காலத்திலே வேலனைப் போலவும் சில பேர் இருக்கத்தான் செய்ருங்க!...

சுந்தரம்: சரி!...உன்தாத்தா கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக முழு விபரங்களையும் நீ சொல்லிக் கொண்டேயிரு — நான் அப்படியே மூன்று நான்கு காப்பிகள் டைப் செய்து மேலேயுள்ள அதிகாரிகளுக்கு ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பி வைக்கிறேன். நாளைக்கு, வீட்டைக் காலி செய்துவிட்டு ''சார்ஜ்'' ஒப்படைத்துவிட்டு - அதற்குமறுநாள் உன்னை உன் அத்தையிடம் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுகிறேன்.

(அப்போது சார்! சார்! என்று கத்தியபடி வேலன் உள்ளே ஓடி வந்து சுந்தரத்தின் கைகளைப் பிடித்துக் கொள்கிருன்)

சுந்தரம்: என்ன வேலா! என்ன?

வேலன்; உங்கள் கட்டளைப்படி நான் வெளியே போனேனு, போனதும் தெருவிலே இருந்துமனச்சாட்சிங்கிற பயல் என் மண்டையிலே ஓங்கி அடிச்சி...

சுந்தரம்: என்னது மனச்சாட்சி! மண்டையிலே ஓங்கி அடிச்சி...

வேலன்: ஆமாம் சார்!... ஏண்டா வேலா!... எஜமான் பதவியில இருந்த வரைக்கும் அவரோட இருந்தே! அவருக்கு பதவிபோனதும், அவரை விட்டுட்டுப் போறியே; இதான் மனுஷனுக்கு அழகான்னு மனச்சாட்சி குடைஞ்சுதுசார்! உடனே நானும்; என் பதவியை உதறிட்டு உங்களோட வந்துட முடிவு பண்ணிட்டேன் சார்!

சுந்தரம்: வேலா! இந்த உலகத்தில் மனிதர்கள் மிகவும் குறைந்துவிட்டார்கள். இரண்டுகால் மிருகங்களே அதிகரித்து வருகின்றன என நினைத்திருந்தேன் வேலனைப் போன்ற விசுவாசமுள்ள நெஞ்சங்களும் இருக்கின்றன என்பதை இப்போது உணருகிறேன்.

வேலன்: சார்... உங்களுக்கு ஏற்பட்ட சங்கடத்திலே மிருகங்களை தயவு செய்து இழிவாகப் பேசாதீங்க சார்! வீட்டு நாயை துரத்தினுகூட போகாது சார்! வீட்டிலே வளர்க்கிற ஆடு மாடுகூட அப்படித்தான் சார்!... மனுஷன் மேலே உள்ள கோபத்திலே அந்த மிருகங்களைகேவலமாக எடைபோடாதீங்க சார்!...

சுந்தரம்: வேலா! (என்றழைத்தவாறு) அவனை அன்புடன் தழுவிக் கொள்ளுதல்)

(காட்சி முடிகிறது)



காணிக்கை செலுத்துவீர்! கழகத்தை வளர்ப்பீர்!

இராயபுரம் பகுதிச் செயலாளர் நண்பர் இராசரத்தினம் இங்கே ஒரு பையைக் கொடுத்தார் அதிலே ஒரு வேட்டியும் துண்டும் இருந்தது. அந்தப் பை நிறையப் பணம் போட்டுக் கொடுத்திருந்தால் — எனக்கல்ல; கட்சிக்குக் கொடுத்திருந்தால் —மகிழ்ந்திருப்பேன்; எனவே, நீங்கள் செய்ய வேண்டிய காரியம் —ஆளுக்கு ஐந்து ரூபாய் ஒரு மாதத்திற்கு மிச்சப்படுத்தி, நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை நிலையத்திற்கு —பொருளாளர் பெயருக்கு —அல்லது பொதுச் செயலாளர் பெயருக்கு-அல்லது தலைவர் பெயருக்கு - என்று, எங்கள் மூவரில் யார் பெயருக்கு அனுப்பினுலும், கழகத்தினுடைய கணக்கில் வங்கியிலே பத்திரமாக வைக்கப்படும்.

மாதம் ஒன்றுக்கு ஐந்து ரூபாய்—இந்தமாதம் அனுப்பிவிட்டோம், அடுத்த மாதம் அனுப்பத் தேவையில்லை என்று கருதாமல் —ஆளுக்கு ஐந்து ரூபாய் மாதம்-நீங்கள் அனுப்பிக்கொண்டிருப்பீர்களேயானுல் - பணமில்லாத கஷ்டம், பண வறட்சி நம்முடைய கழகத் தொண்டர்கள் தேர்தலிலே ஈடுபட்டு வேலை செய்ய வண்டி வாகன வசதிகள் — இவை இலலாமல் படுகின்றகஷ்டம் — அவைகளைப் போக்கத்தான்! அவர்களைப்போல பத்து ரூபாய், ஐம்பது ரூபாய் வாக்குகளுக்குக் கொடுக்க அல்ல!

நம்முடைய தொண்டர்கள் வாகன வசதி படைத்தவர்களாக ஆங்காங்கே ஓடியாடி வேலை செய்ய-சுவரொட்டிகள் அச்சடிக்க - வாக்குகள் சரியாக இருக்கின்றனவா என்று பார்க்கக்கூடச் செலவாகின்றது. இந்தக் காரியங்களுக்காக நீங்கள் இன்றே கங்கணம் கட்டிக் கொள்ள வேண்டும். ஐந்து ரூபாய் மாதந்தோறும் கழகத் தலைமை நிலையத்திற்கு அனுப்புவது என்று நீங்கள் கங்கணம் கட்டிக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு மாதமும் வயிற்றைக் கட்டி வாயைக்கட்டி— ஐந்து, ஐந்து ரூபாய் நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை நிலையத்திற்கு அனுப்ப வேண்டும்; அனுப்புவீர்களா? (''அனுப்புவோம்'' — மக்கள் முழக்கம்)

அப்படி நீங்கள் அனுப்புவீர்களேயானுல், அது பல இலட்சமாக திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை நிலையத்தில் குவியும். பத்து லட்சம் ரூபாய் இருந்தால் 67 தேர்தலிலே வெற்றி பெற்றுக்காட்டுகிறேன் என்று நான் கடற்கரைக் கூட்டத்திலே சொன்னேன். அண்ணு கூட வியப்படைந்தார். பத்து லட்சமா? முடியுமா? என்று! திரட்டிக் காட்டினேம். 138 பேர் சட்டமன்றத்திற்கு வந்தோம்.

இன்றைக்கு நான் உங்களைக் கேட்கிறேன். பத்து இலட்சமோ, பதினைந்து லட்சமோ சேர நீங்கள் ஐந்து, ஐந்து ரூபாய் அனுப்பினுல்தான் முடியும். எனவே நீங்கள் இதனைக் கடமையாகக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உங்களுடைய காணிக்கையைத் தொடர்ந்து செலுத்துவீர்களேயானுல் வெற்றிநிச்சயம், உறுதி என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

-தலைவர் கலைஞர்

(இராயபுரம் பொதுக்கூட்டத்தில் பேசியது)

ANTI-HINDI CONFERENCE SOUTH WARNS THE CENTRE

Dr. KALAIGNAR PLEA FOR CONTINUING ENGLISH

"The Central Government is imposing HINDI in Tamil Nadu, not only secretly but even openly. To protest against this, meetings would be held on the 10th of September and in case the Masters of Delhi fail to pay heed to our censure, we will be driven to the necessity of boycotting all the Central Ministers with Black-flags."

So spoke *Dr. Kalaignar* endorsing the resolutions passed at the anti-Hindi Conference held at Periyar Thidal on the 15th August 1978. *Raja Sir M. A. Muthiah Chettiar* presiding, traced the Anti-Hindi Agitation from 1938 onwards and unmasked the crooked ways and devious methods adopted in finding a permanent solution to the official language problem.

Kunrakudi Adigalar inaugurating the conference, stressed the Centre to implement the views of Arignar Anna on this vital issue by making all the National Languages as the official languages of the Centre.

Leaders and representatives belonging to Muslim League, Forward Block, Communist Party of India, Congress, Janata, Kamaraj Congress, D.K. and D.M.K. participated in the conference.

Prominent journalists as Mr. Kandaswamy (Dinakaran) Mr. Velur D. Narayanan (Alai Osai) Mr. S. S. Mariswamy (Kandeeban) and renowned parliamentarian, Dr. A. Krishnaswami and a host of Tamil Scholars including K. A. P. Viswanatham and poets participated in the deliberation conducted from dawn to dusk.

Early in the morning Mr. K. Veeramani, General Secretary of the D.K. placed a wreath at the memorial of Talamuthu and Natarajan—the martyrs of the Anti-Hindi Agitation in 1938.

The Periyar Thidal was overflowing with unprecedented crowds. People from far and near, hailing from various districts, clad in Khaddar, black and white, belonging to various parties, young and old, including ladies and children were seen seated together.

It was very difficult to go round the four corners of the Thidal. As one who has seen the vast gathering in 1938 and 1948 Anti-Hindi meetings, I was surprised to see more Congressmen belonging to Indira, Janata, Kamaraj divisions in the gathering.

Mrs. T. N. Ananthanayagi a long-time Congress propagandist openly expressed that Congress lost power in Tamil Nadu mainly because of its blind love towards Hindi.

Dr. Santhosham, a prominent figure of the Janata categorically stated that he would quite the party; if the Centre fails to respond to the sincere feelings of the people of the Tamil Nadu.

Mr. Kumari Anandan, Leader of the Gandhi-Kamaraj Congress was very critical of the Janata High Command. He made it distinctly clear in his speech that in the matter of safeguarding the interests of Tamils, all would muster under one banner and fight-out tooth and nail the crude imposition of Hindi.

This Anti-Hindi Conference is indeed unique in the sense, that more than the followers of Periyar E. V. Ramaswamy and Arignar Anna, the Chieftains of the National forces, who in their giddy heights of patriotism, pronounced hymns of hate to malign and villify the anti-Hindi movement from the year 1938 were seen very repentent.

Rising amidst thunderous ovation *Dr. Kalaignar Karunanidhi* wound up the proceedings of the conference, exposing the shame and hypocrisy of the Hindi imperialists. He called for all patriotic citizens of Tamil Nadu to get ready for the last battle against Hindi imperialism. One student remarked that the speech of the learned Doctor Kalaignar reminded of the famous war speeches of Winston Churchill.

The Centre could no longer play the old dirty tricks by calling the conference as ill-motivated or sponsored by mere separatist forces, atheists or unpatriotic citizens and so on.

Dr. Kalaignar Karunanidhi, traced the history of the Anti-Hindi movement in his inimitable style thus

"This battle against Hindi is not of recent origin". It was started in 1937 by Periyar E. V. Ramasamy. The anti-Hindi force came into being long ago. Veterans like Arignar Anna, Marai Malai Adigal, Thiru. Vi. Kalyanasundram, Somasundara Bharathi, strengthened the movement during the past 40 years. More than a thousand people were imprisoned in the very first agitation against the compulsory introduction of Hindi in 1938. Mr. C. Rajagopalachari, who was then the Chief Minister of Madras Presidency proclaimed *"Hindi never, English ever"* before his death.

Tracing the role of the nationalists, *Dr. Kalaignar* stated "In those days the Nationalists were not against make Hindi as the sole official language of India, they sold their very souls to the dark power and waded through sins sharing the profits of their treacherous acts. They throw to the winds all considerations of justice and fair-play. For mere official loaves and fishes of office they betrayed the Tamil Nation. Now they realise poignently and acutely the dangers of imposing Hindi. The Hindi imperialist designs are no more a secret. Even the repeated assurances given by Pandit Nehru, Lal Bahadur Sastri, Indira Gandhi and Morarji Desai are not put into practice. Spoken words belie their performance. We could no longer repose trust and confidence in their meaningless, empty, dubious and insincere assurances. One thing is clear beyond doubt. *Whoever might come to power at the Centre there will be no end to Hindi imposition. They werefor Hindi then and they continue to be the same even now.* Because they continue to thrust on us Hindi by all indecent, ignoble and conceited ways, we are forced to alter our stand towards Hindi. We are no more against the imposition of Hindi by compulsory means. *We must hereafter be against Hindi in whatever way it might show its head in Tamil Nadu. That does not mean that we will go to U.P. Madya Pradesh and other Hindi states and oppose the prospects of Hindi.* We are Tamils. We could no longer tolerate the imposition of Hindi in our Tamil Nadu in any form. We have to safeguard our mother-tongue Tamil. Otherwise the coming generations would curse us as traitors.

In the first battle against Hindi in 1938 more than a thousand people were imprisoned. Periyar was thrust in the Bellary Jail. Arignar Anna was sentenced to six months R.I. Two youths Thalamuthu and Natarajan were killed. It is after all these that the Congress regime yielded. Compulsory study of Hindi was given up.

Again in 1947 the Congress Government introduced Hindi and in the agitation worst repressive measures were freely resorted to by the Hindi imperialists. Even in that battle we scored a tremendous victory making all sacrifices.

In 1965 our agitation reached its crucial stage. The entire Tamil nation was alive, awake and keen. Tamilians in all walks of life entered the battle-field. It was more a revolution than a mere agitation. We faced the bullets. Eight youths gave up their life by burning themselves for the cause of Tamil.

Today the tunes are changing. We then fought the Hindi ourselves. Now, our fold has increased. We have in our midst today many new allies.

You have heard the speeches of other party leaders proudly proclaim that they would oppose Hindi. They are more vociferous and keen in safeguarding the interests of Tamil Nadu. It is a great victory to the pioneers of the Hindi agitation. Those who indulged in cheap jibes, slanders and false accusations in the beginning against us are today completely convinced of our honest, sincere and patriotic endeavour.

Today is the independence day. It is not a mere day of pomp and show, it is a day signifying the deliveries of freedom from the British. But we are met here for real freedom and complete deliverence from Hindi imperialism.

Narrating the ways in which Hindi is being imposed against the interest of Tamil, *Dr. Kalaignar* reiterated that Tamils would not become second rate citizens of India. *He strongly pleaded for the bilingual formula and the continuance of English as the link language for ever.*

Winding up his speech, *Dr. Kalaignar Karunanidhi* mooted out a novel suggestion to tame the Hindi fanatics to senses. Now that the capital of India is at the northern part of Delhi, particularly surrounded and nearer to Hindi states the centre is faced with lot of inconveniences and delicate problems in solving the language issue. It is quite common and true that only Hindi speaking people have an easy access and close touch with the Centre.

It is natural that the Centre is misled to believe that Hindi is the common link language of India.

So, I appeal to the Centre to shift the Capital to a convenient place in the heart of India say, for instance, Hyderabad. Such a change would bring to limelight many truths. There would be an end to the threats and pressures by the Hindi fade.

I do not make this suggestion for mere fun, I mean it very seriously because such a wise step would dispel many of the misnomers now harassing the minds of the Leaders at Delhi.

It is for the Centre to take a decision acceptable to all citizens of India.

The time has come to act with wisdom.

Let us wait and see what the Centre does.

—"VENU"

★

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால், அரசி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டி தெரு, இராயபுரம், சென்னை-600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம்; 'அன்பகம்' 508 அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை-600018 தொலைபேசி 441009.